# இறையியல் கோலங்கள்

வடிவம் 19 செப்ரெம்பர், டிசெம்பர் 2006 வண்ணம் 3,4



விண்ணக மைந்தனே வருக

999 22

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

Tamil Theological Quarterly

Vol : 19
No : 03, 04
September, december : 2006

வடிவம் : 19
வண்ணம் : 03, 04
செப்ரெம்பர், டிசெம்பர் : 2006

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

**ஆசிரியர் :**

அருட்தந்தை ச. வி. ப. மங்களராஜா

**துணை ஆசிரியர் :**

அருட்தந்தை. சா. பீ. கிருபானந்தன்
அருட்தந்தை. ப. யோ. ஜெபரட்ணம்

**நிர்வாக குழு :**

அருட்சகோ. எ. எட்வினாதன்
அருட்சகோ. அ. ஜெ.அ. ஜெயரஞ்சன்
அருட்சகோ. ஆ. மைக் மயூரன்
அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்
அருட்சகோ. கீ. லக்ஸ்மன்
அருட்சகோ. ப. றெனாட் செறில்நெஸ்

**வெளியீடு :** புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Editor :**

Rev. Fr. S. V. B. Mangalarajah

**Sub Editors :**

Rev. Fr. S. F. Kirupananthan
Rev. Fr. P. J. Jebaratnam

**Administrative Board :**

**Rev. Bro. E. Edwinathan**
**Rev. Bro. A.J.A. Jeyaranjan**
**Rev. Bro. A. Mac Mayooran**
**Rev. Bro. A. Justin**
**Rev. Bro. K. Luxman**
**Rev. Bro. P. Renard Cherilnes**

**Publication :** St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel No.: 021 222 2482, 021 222 7145.

# பொருளடக்கம்


01. ஆசிரியரிடமிருந்து ........

02. எமது திருத்தந்தை பேசுகிறார்

03. யோசேப்பு மரியாவின் கணவர்

*அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம்*

04. மெசியா பற்றிய நம்பிக்கை விவிலியப் பார்வையில்

*அருட்சகோ. அ. இயூஜின் அமலராஜ் அ.ம.தி.*

05. மரியாளும் - பக்தி முயற்சிகளும்

*அருட்சகோதரி லூமினா போல்ராஜா - தி.கு.*

06. பரிசுத்த திருத்தந்தையர்களின் திருமடல்களில் அன்னை மரியா பற்றிய குறிப்புகள்

*அருட்சகோ. அ. கிறிஸ்ரி றூபன் பெனான்டோ*

07. மரியியலும் பெண்விடுதலையும் அடையாளங்களின் தேடல்

*அருட்திரு. சா.பி. கிருபானந்தன்*

08. கவிதைக் கோலங்கள்

09. இயேசுவின் பிறப்பும் மாசில்லாக் குழந்தைகளும் அன்றும் இன்றும்

*அருட்சகோதரி அருள் - தி.கு.*

10. குடும்ப வாழ்வில் மரியா

*திரு. சி.சா. பங்கிராஸ்*

11. இவ்விதழின் இறையியலாளர் - ஜெருசலேம் நகர் புனித சிறில்

*அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்*

12. SYNOPSIS

13. குறுக்கெழுத்துப் போட்டி

# ஆசிரியரிடமிருந்து.....

அன்புள்ள வாசகர்களே,


ஆபத்து வேளைகளில் தம்மை அண்டி வருவோருக்கு ஆறுதலும் பாதுகாப்பும் நம்பிக்கையும் தருபவள் அன்னை மரியாள். நமது நாட்டுக்கு அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்களில் அன்னை மரியாளின் பாதுகாப்பு கட்டாயம் தேவையான தொன்று.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து மோசமடைந்து வந்த சூழ்நிலையால் ஏற்பட்ட அவலங்கள், ஆட்கடத்தல்கள் காணாமல் போதல்கள், கொலைகள், பொருளாதார நெருக்கடியும், பட்டினி நிலையும், நோய்களும், உயிரிழப்புகளும் போன்றவை ஏராளம். எமது குருமடத்தில் பயின்று உயிர்த்துடிப்புடன் பணியாற்றி வந்த அருட்பணி ஜிம்பிறவுண் அடிகளாரின் காணாமல் போனமையும் இதனுள் அடங்கும்.

இந்த அசாதாரண சூழ்நிலை நமது இறையியல் கோலங் களையும் பாதித்தது. காலம் தாழ்த்தி இரு இதழ்கள் ஒன்றாக வெளிவருகின்றது.

மரியியல் இரண்டாம் பிரிவாக வெளிவரும் இவ்விதழில் வரும் கட்டுரைகளில் இக்காலத்தில் கவலை தோய்ந்த சுவடுகள் கூடப் பதிந்துள்ளன.

இவ்விதழில் மரியாளைப் பற்றிய கட்டுரைகளுடன் கிறிஸ்து பிறப்புக் காலத்தின் முக்கிய பாத்திரங்கள் பற்றிய கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. மரியாளுடன் திருக்குடும்பத்தினதும் திருச்சபையின்



பாதுகாவலர் யோசேப்பு பற்றியும் இரண்டு வார்த்தை பேச முன்னரே இயேசுவுக்காக இரத்தம் சிந்திய மாசில்லாக் குழந்தைகள் பற்றியும் கட்டுரை இக்கால ஓட்டத்திற்கேற்ற சிந்தனைகளுடன் தரப்பட்டுள்ளன.

கிறிஸ்துவின் பிறப்பும் பிறக்கின்ற புதிய வருடமும் நமது நாட்டில் நீதியுடன் கூடிய சமாதானத்தைக் கொணரும் என நம்புவோம்.

திருச்சபை வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து திருச்சபையையும், தம்மை தஞ்சம் என்று அண்டி வந்தோரை அரவணைத்துப் பாதுகாத்து வந்த அன்னை மரியாள், நம் ஒவ்வொருவரையும் பாதுகாத்து இறைவனிடம் இட்டுச் செல்ல வேண்டுவோம்.

**உங்கள் அனைவருக்கும் எனது நம்பிக்கையுடன் கூடிய கிறிஸ்து பிறப்பு புதுவருட வாழ்த்துக்கள்.**

*நன்றி*

**ச.வி.ப.மங்களராஜா**



எமது

# திருத்தந்தை பேசுகிறார்



## கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான அர்த்தம் என்ன?

திருவருகைக் காலத்தின் வழிபாடுகள் இறைவன் நம் மத்தியில் வருகின்றார் என்ற உண்மையை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி உறுதிப்படுத்துகின்றன. எமது நம்பிக்கையின்மையையும் தகர்த்தெறிகின்றன.

இறைவன் எம்மோடு தங்குவதற்காக வருகின்றார்; எம் ஒவ்வொருவரினதும் எல்லா வாழ்வு நிலைகளிலேயும் எமக்குள்ளும், எம்மோடும் வாழுவதற்காக வருகின்றார். அவரிடமிருந்து எங்களைப் பிரித்து தனிமைப் படுத்துகின்ற வெற்றிடங்களை நிரப்ப வருகின்றார். தம்மோடும் எம் அயலவ ரோடும் எம்மை ஒப்புரவாக்குவதற்காக வருகின்றார்.

ஒவ்வொரு மனிதருடைய இதயக் கதவுகளையும் தட்டித் திறந்து குடிகொண்டு தனிப்பட்டவர்களின் வாழ்விலும், குடும்பங்களிலும், சமுதாயத்திலும் தோழமையும், புரிந்துணர்வும், சமாதானமும் செழித்தோங்கச் செய்ய இறைன் நம் மத்தியில் வருகின்றார்.



எனவேதான் திருவருகைக் காலம் நம்பிக்கையின் காலமாகும். இக்காலத்தில் இறைமக்கள் செபத்திலும் அன்பின் அர்ப்பணிப்பிலும் விழித்திருந்து காத்திருக்க அழைக்கப்படுகின்றார்கள்.

இப்படியான காத்திருப்புக்காக எம்மோடு கூட இருந்து நமக்கு துணை செய்பவராக அமலோற்பவியாகிய தூய கன்னிமரியா இருக்கின்றார். மரியாவினுடைய இளமையின் கதவுகளை இறைவன் தட்டியபோது விசுவாசத்தோடும் அன்போடும் பதில் கொடுத்தவராக அவர் விளங்குகின்றார்.

இறைவனின் மாட்சிமையினை பிரதிபலிக்கும் மரியாவின் அழகினால் நாம் கவரப்பட்டு நாமும் எம் இதயக் கதவுகளைத் திறந்து எமக்குள் வருகின்ற இறைவனின் கொடைகளால் நிரப்பப்படுவோமாக!

**திருத்தந்தை 16ம் பெனடிக்ற்**

# அருட்பணி ஜிம்பிறவுண் அடிகளாரே!
# நீ இருக்கும் இடம் தெரியாதே.....?



வலியோடு சில வரிகளை
வரைய நினைக்கின்றோம்...
முடியவில்லையடா?
நீ இங்கே இல்லை என்பதை
நியாயப்படுத்த எம்மால்
முடியவில்லையடா?
குருக்குழந்தையாய்
குதூகலமாய் - நீ
நடமாடிய இந்த
குருமடமோ.. உன்
வருகை எண்ணி பார்த்திருக்கிறாள்..

உண்மைதனை இடித்துரைத்து
நேர்மைதனை ஆடையாக்கி..
சத்தியமே நின்று நிலைக்க..
சரித்திர நாயகன் இயேசுவை - இந்த
சந்ததிக்கு காட்டினாயே!
நீ போகவில்லை – எம்மோடு
வாழுகின்றாய்!

பாதை காட்டினாய்- எமது
பயணம் தொடர
சோரவில்லை நாங்கள்
ஏழைகள் துயர் துடைப்போம்..
நீ வீழ்த்தப்படவில்லை
விதையானாய்.

- நிர்வாகக் குழு -

# யோசேப்பு மரியாவின் கணவர்

- அருட்திரு. ப.யோ.ஜெபரட்னம் -

## 1. முன்னுரை

திருச்சபையின் வாழ்வில் யேசுவைப் பெற்றெடுத்த தாய் மரியாவுக்கு அடுத்தபடியாக சட்டப்படி மரியாவின் கணவரும் யேசுவை வளர்த்தெடுத்த தந்தையுமான யோசேப்பு இடம்பெறுகிறார் என்று கூறமுடியும். இறைவனின் அழைத்தலுக்கு 'ஆம்' என்று பதிலளித்து தனது வாழ்வால் பதில் கொடுத்த மரியாவின் வாழ்வு எவ்வாறு திருச்சபைக்கு முன்னுதாரணமாக இருக்கின்றதோ, அவ்வாறே இயேசுவை வளர்த்து பணிவாழ்வுக்கு அனுப்பி வைத்த யோசேப்புவின் வாழ்வும் திருச்சபை இவ்வுலகில் ஆற்றும் பணிக்கு முன்னுதாரணமாக அமைகின்றது.

## யார் இந்த யோசேப்பு?

யாக்கோப்பின் மைந்தனான குலமுதுவர் யோசேப்பினது பெயர் யூதமக்கள் மத்தியிலே மிகப்பொதுவான ஓர் பெயராகும். அரிமத்தியாவூர் யோசேப்பு (மத். 27:57), யோசேப்பு பர்சபாஸ் திப.1:23), யோசேப்பு பர்ணபாஸ் (திப. 4:36) போன்று இப்பெயரைத் தாங்கியவர்கள் பலர் உள்ளனர். மரியாவின் கணவரான யோசேப்பு யேசுவின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற பல சந்தர்ப்பங்களை நற்செய்தி ஏடுகளில் நாம் காணலாம். (மத். 13:55; லூக். 3:23; யோவா 1:45; 6:42). மத்தேயு நற்செய்தியின் முதலிரு அதிகாரங்களிலும் லூக்கா நற்செய்தியின் முதலிரு அதிகாரங்களிலுமே யோசேப்பு பற்றிய சில தகவல்களை காணமுடிகிறது.[1]

---

[1] பேரரசனது கட்டளைக்கிணங்க பெத்தலகேம் சென்றது, அங்கு இயேசு பிறந்தது, இடையர்கள் குழந்தையைக் காணவந்தது, குழந்தைக்கு விருத்த சேதனம் செய்தல், குழந்தையை ஆலயத்தில் அர்ப்பணித்தல். ஞானிகள் வருகை, எகிப்துக்கு ஓடிப்போதல், பலஸ்தீனத்துக்குத் திரும்புதல், காணாமல் போன சிறுவன் இயேசுவைக் கண்டுபிடித்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் யோசேப்பு சிறப்பிடம் பெறுகிறார்.

## 2.1 மத். 1:6-16

மத்தேயு நற்செய்தியில் மேற்குறிப்பிட்ட பகுதியில் இயேசு தோன்றிய வம்சாவழி பற்றி குறிப்பிடப்படுகின்றது. இங்கு யோசேப்பின் தந்தை யாக்கோபு எனவும் இவ்வம்சாவழி சாலமோனின் தந்தை தாவீது மன்னனை ஆரம்பமாக கொண்டதாக கூறப்படுவதை காணலாம்.

இயேசு தாவீதின் மரபில் தோன்றியவர் - தாவீதின் குமாரன் (மத். 15:23), மெசியா என்றழைக்கப்பட தகுதியானா (மத் 22:42) என்ற உண்மையை வெளிப்படுத்துவதே ஆகும்.

## 2.2 லூக் 3:23-32

ஆனால் லூக்கா குறிப்பிடுகின்ற வம்சாவழியில் வேறு விதமாக குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம். லூக்காவின் எழுத்துப்படி யோசேப்பினுடைய தந்தையாரின் பெயர் ஏலி ஆகும். அத்துடன் இவ்வம்சாவழி நாத்தானினூடாக தாவீது மன்னனை சென்றடைவதை காணுகின்றோம்.

மத்தேயு, லூக்கா ஆகியோர் குறிப்பிடுகின்ற வம்சாவழிகள் முற்றிலும் வேறுபாடானவையாக இருந்தாலும் சலாத்தியேல், சொரொபாபேல் ஆகியோரில் ஒன்றிணைவதை அவதானிக்க முடியும். இவ்வேறுபாடுகளுக்கு பல காரணங்கள்[2] உண்டாயினும் மத்தேயுவும் லூக்காவும் குறிப்பிட விரும்புகின்ற முக்கியமான செய்தி என்னவென்பதே கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இயேசு தாவீதின் மரபில் தோன்றியவர் - தாவீதின் குமாரன் (மத். 15:23), மெசியா என்றழைக்கப்பட தகுதியானாவர் (மத் 22:42) என்ற உண்மையை வெளிப்படுத்துவதே இவற்றின் நோக்கமாகும்.[3]

மத்தேயு விவரிப்பின்படி யோசேப்பு பெத்தலகேமைச் சேர்ந்தவர். பிற்காலத்தில் நசரேத்தில் குடியேறியவர். ஆனால் உரோமைப் பேரரசின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் பொருட்டு, யோசேப்பு நசரேத்திலிருந்து பெத்தலகேமுக்குச் சென்றதாக லூக்கா விவரிக்கின்றார். (லூக் 2:4-5)

---

[2] மத்தேயுவின் வம்சாவழியில் குறிப்பிடப்படும் யோசேப்புவின் தந்தை யாக்கோபும், லூக்காவின் வம்சாவழியில் குறிப்பிடப்படும் யோசேப்புவின் தந்தை ஏலியும் சகோதரர்களென்றும், ஏலி பிள்ளையின்றி இறந்ததால் யூத வழக்கப்படி யாக்கோபு ஏலியின் மனைவியை மணந்து யோசேப்பு பிறந்தார் என்ற ஒரு விளக்கமும் உண்டு. Cf. Julius Africanus in his letter to Aristides.

[3] Cf. Filas F.L., St. Joseph. New Catholic Encyclopedia Vol 7 pg 1106

## 3. யோசேப்பு ஒரு தச்சரா?

யோசேப்பு தச்சுத்தொழிலையே செய்தார் என்பது பொதுவான ஒரு விளக்கமாகும். மத் 13:55. "இவர் (இயேசு) தச்சன் மகன் அல்லரோ?" என்பதும் மாற். 6:3, "இவர் (இயேசு) தச்சன் அல்லவா?" என்பதும் யோசேப்புவும் யேசுவும் தச்சுத் தொழிலாளர்கள் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆயினும், மேற்குறிப்பிட்ட வார்த்தைப் பிரயோகங்களில் தச்சர் என்ற பதத்துக்காக பயன்படுத்தப்படும் கிரேக்க, இலத்தீன் சொற்பதங்களின் சரியான அர்த்தங்களை நோக்கும்போது யோசேப்புவும், இயேசுவும் கட்டாயமாக தச்சுத் தொழில்தான் செய்திருக்க வேண்டும் என்று கோடிட்டுக் கூறமுடியாது. ஏனெனில். இவர்களின் தொழில் பற்றி குறிப்பிடும் கிரேக்க சொல்லான "தெக்தியோன்", மற்றும் அதற்கிணையான இலத்தீன் பதமான "பேபர்" (faber) அகியவை கைத்தொழிலாளி என்ற அர்த்தத்தை மட்டுமே கொடுக்கின்றன.[4] இதனால் இவை ஒருவர் கற்களிலோ, அல்லது உலோகங்களிலோ அல்லது மரங்களிலோ புரியும் கைத்திறன் வேலைகளில் ஏதாவதொன்றையே குறிக்குமொழிய தனியாக மரங்களால் செய்யப்படும் தச்சுத் தொழிலை மட்டும் குறிக்க வேண்டுமென்றில்லை.

> யோசேப்புவும், இயேசுவும் கட்டாயமாக தச்சுத்தொழில்தான் செய்திருக்க வேண்டும் என்று கோடிட்டுக் கூறமுடியாது.

## 4. யோசேப்பு ஒரு வயோதிபரா?

யோசேப்பு பற்றிய வரையப்பட்ட சித்திரங்களும் அவர் பற்றிய பொதுவான எண்ணங்களும் அவரை ஒரு வயது முதிர்ந்த நபராகவே சித்தரிக்கின்றன.

யோசேப்பு பற்றிய இப்படியான எண்ணங்களுக்கு காரணம் இல்லாமல் இல்லை. கி.பி. 2ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "யாக்கோபின் மூல நற்செய்தி", 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த "தச்சராகிய யோசேப்பின் வரலாறு" என்ற நூல்கள் யோசேப்பை ஒரு வயது முதிர்ந்தவராக, மனைவியை இழந்தவராக, பிள்ளைகளைக் கொண்டிருந்தவராக சித்தரிக்கின்றன.[5] அத்துடன் 2ம் நூற்றாண்டின் தோமா

---

4 Cf Ibid. Pg 1107. ஆங்கிலத்தில் இச்சொற்கள் Craftsman அல்லது artisan என்று பொருள்படும்.

5 இதனடிப்படையில் நற்செய்திகளில் கூறப்படும் யேசுவின் சகோதரர்கள் யோசேப்புவின் பிள்ளைகளாக கருத இடமுண்டு.

எழுதிய நற்செய்தி மற்றும் பார்த்தலோமேயுவின் கேள்விகள், நிக்கோதேமுவின் நற்செய்தி போன்ற நூல்களும் இயேசு மற்றும் யோசேப்பு பற்றிய பல கற்பனையான நிகழ்ச்சிகளைத் தருகின்றன.[6]

யாக்கோபின் மூலநற்செய்தி குறிப்பிடும் பின்வரும் நிகழ்வு குறிப்பிடப்படக் கூடியது. மூன்று வயது முதல் ஆலயத்தில் பெரிய குருவின் பாதுகாப்பில் வளர்ந்த மரியாவுக்கு பன்னிரெண்டு வயதானபோது, அவர் பருவமடைந்தபோது, பெரியகுரு மரியாவுடைய புனிதத்துவத்தை காப்பாற்ற ஏதுவான ஒரு துணைவரை அவருக்கு திருமண ஒப்பந்தம் செய்துவைக்க விரும்பினார். இதற்காக அப்பகுதியில் இருந்த மனைவியை இழந்தவர்கள் எல்லாரையும் அழைத்து இறை அடையாளம் மூலமாக மரியாவின் துணைவரை தெரிந்தெடுக்க விரும்பி அவர்களிடம் ஒரு கோலைக் கொடுத்து பரிமாறும்படி கட்டளையிட்டார். யோசேப்பு அந்தக் கோலைப் பெற்றுக் கொண்டபோது அக்கோலிலிருந்து ஒரு புறா வெளிப்பட்டு அவருடைய தோளில் வந்து அமர்ந்தது.[7]

இதனை இறை அடையாளமாக ஏற்றுக்கொண்ட பெரிய குரு யோசேப்புவை மரியாவுக்கு திருமண ஒப்பந்தம் செய்ய விரும்பினார். தன்னுடைய வயோதிப நிலையை எண்ணிப்பார்த்து தான் இளம் பெண்ணான மரியாவைத் திருமணம் செய்யுமிடத்து மக்கள் மத்தியில் ஏளனப்பட நேரிடும் என்பதால் முதலில் யோசேப்பு மறுப்புத் தெரிவித்தாலும் பின்னர் அது இறைதிட்டமென்பதை உணர்ந்து மரியாவை ஏற்றுக்கொள்ள முன்வந்தார் என்ற கதையை இந்நூலில் காணமுடிகிறது.[8]

> யோசேப்பு சட்டங்களை, போதனைகளை நுணுக்கமாகக் கடைப் பிடிக்கும் நேர்மையாளராக (மத்.1:19) இருந்ததால் திருமணம் பற்றிய இவ்வரை யறையை அவர் மீறியிருக்க முடியாது.

ஆயினும் யோசேப்பு ஒரு வயோதிபர் என்பது ஒரு தவறான கருத்தென்பதே பல இறையியலாளர்களின் ஒருமித்த அபிப்பிராயமாகும். அக்காலத்தின் மறைவல்லுநர்கள் ஒரு ஆண் 13 வயதுக்கும் 19 வயதுக்குமிடையே திருமணம் செய்ய வேண்டுமென்றே கற்பித்து வந்தார்கள். யோசேப்பு சட்டங்களை, போதனைகளை நுணுக்கமாகக் கடைப்பிடிக்கும் நேர்மையாளராக (மத்.1:19) இருந்ததால் திருமணம் பற்றிய இவ்வரையறையை

---

6 காண்க. விவிலியக் களஞ்சியம், Vol. V பக். 502

7 அக்கோல் துளிர்விட்டு மலர்ந்து என்றும் வேறு கதைகளில் உண்டு.

8 Cf. The Book of James or Protoevangelium or The Nativity of Mary.

அவர் மீறியிருக்கமுடியாது. ஆயினும் யேசுவின் பகிரங்கப் பணிக் காலங்களில் யோசேப்பு உயிருடன் இருந்ததற்கான எந்தத் தகவலும் நற்செய்தி ஏடுகளில் காணப்படாமையால் அவர் தனது 50 வயதுக்கு முன்னதாக இறந்திருக்கலாம் என்றே எண்ண முடிகிறது.[9]

## 5. மரியா கர்ப்பவதி - யோசேப்பு குழப்பம்

மரியா கன்னியாகவே கற்பமானார் என்பதை நற்செய்தி ஏடுகள் குறிப்பிடுகின்றன. (மத். 1:18-25) மத்தேயு இதனை யூத திருமண வழக்கப்படி நிரூபிக்கின்றார். யூத திருமணங்கள் ஆண், பெண் சம்மதத்தை தெரிவிக்கும் திருமண ஒப்பந்தம் (erusin) கணவன் மனைவியை முறைப்படி தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வு (nisuin) என்னும் இரு நிகழ்வுகளைக் கொண்டவை. மரியா கற்பவதியாகியது இந் இரு நிலைகளுக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது.[10] எனவேதான் யோசேப்பு மரியாவை முறைப்படி வீட்டுக்கு அழைத்துச் செல்லமுன் அவர் கருப்பமாக இருப்பதை அறிந்து குழம்பினார் என்பதை காண்கிறோம். மத். 1:19ன்படி மரியாவை விலக்கிவிட அதாவது விவாகரத்து செய்ய யோசேப்பு திட்டமிட்டார் என்பது தெளிவாகின்றது. மரியாவின் கர்ப்பத்தைப்பற்றி அறிந்த யோசேப்பின் நிலையைப் பின்வரும் மூன்று வழிகளில் கருதலாம்.[11]

!த திருமணங்கள் ஆண், பெண் சம்மதத்தை தெரிவிக்கும் திருமண ஒப்பந்தம் (erusin) கணவன் மனைவியை முறைப்படி தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வு (nisuin) என்னும் இரு நிகழ்வுகளைக் கொண்டவை.

1) அவர் மரியாவை உண்மையாகவே விபசாரக் குற்றம் புரிந்தார் என சந்தேகித்தார்.[12]

---

[9] Cf. Filas. F.L., St. Joseph, New Catholic Encyclopedia, Vol.7, Pg .1107 தச்சராகிய யோசேப்பின் வரலாறு என்ற நூல் யோசேப்பு 110 வயதில் இறந்தார் என்று கூறுகின்றது.

[10] Cf. Neuner, J., Mary - Mother of the Saviour, Theological Publications in India, Bangalore, 1995, Pg 33-34.

[11] Cf. Filas F.L. St. Joseph, New Catholic Encyclopedia. Vol:7, Pg 1108.

[12] St. Augustine, Epist, 153.4,9

2) மரியா மெசியாவினுடைய தாய் என்பதை அறிந்து அப்படிப்பட்ட ஒரு பெண்ணின் கணவராக தான் இருக்க தகுதியில்லை என்று எண்ணி அவரை விலக்கிவிட எண்ணினார்.[13]

3) தாங்கமுடியாத, துயரம் நிறைந்த ஒரு குழப்பத்துக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டார்.[14]

மேற்படி கூறப்பட்ட நிலைகளில் மூன்றாவது நிலைதான் யோசேப்புவில் மேலோங்கி நின்றதாக பலரும் ஏற்றுக் கொள்கிறார்கள். மரியா குற்றமற்றவர் என்பதை அவர் உணர்ந்து கொண்டதால் அவரை பகிரங்கமாக காட்டிக் கொடுத்து அவர் தண்டனை பெற வழிவகுக்காமல் மறைவாக, அதாவது, தான் அவரை விலக்குவதற்கான காரணத்தை பகிரங்கமாக அறிவிக்காமல், விலக்கிவிட முன்வந்தார்.[15]

ஆயினும் மரியா தூய ஆவியால் கர்ப்பமானார் என்ற உண்மையை இறைத்தூதர் வழியாக அறிந்த யோசேப்பு அவரை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் மரியா மட்டிலும் அவர் பெற்றெடுக்கப்போகும் குழந்தை மட்டிலும் தனது பொறுப்பை முழுமையாக ஏற்றுக் கொண்டார்.[16]

## 6. யோசேப்பின்பால் பக்தி முயற்சிகள்

நற்செய்திகளில் யோசேப்புவைப் பற்றி கூறப்படுபவைகளைவிட நற்செய்திக்கு புறம்பான நூல்கள் யோசோப்புவைப் பற்றி கூறும் பல நிகழ்வுகளே யோசேப்பின்பால் பக்தி முயற்சிகள் ஆரம்பமாக, வளர்ச்சியடைய காரணமென்று கூறலாம்.

வரலாற்றில் அறியப்பட்டபடி, முதல்முறையாக 8ம் நூற்றாண்டளவில் வட பிரான்ஸ் அல்லது பெல்ஜியம் ஆகிய இடங்களில் மார்ச் மாதம் 20ம் திகதியை "மரியாவின் கணவர்" என்ற பெயரில் அனுசரித்து வந்தார்கள். இதே காலத்தில் றெயிச்சேனோ என்னுமிடத்தின் பெனடிக்ற் ஆச்சிரமத்தில் மார்ச் 19ம் நாளை

---

13 St. Bernard, Hom. super "Missus est" 2:14 (Pl 183:68)

14 F. Suarez, In 3, q.29

15 இப்படியான விவாகரத்து முறைகளும் யூதவழக்கில் இருந்தன.

16 "மரியா குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை அவர்கள் கூடி வாழவில்லை" (மத். 1:25) என்ற வசனம் மரியாவின் என்றும் கன்னித்தன்மையை (Perpetual Virginity) குறிப்பிடுகிறதேயொழிய குழந்தை பிறந்த பின்னர் கூடி வாழ்ந்தார்கள் என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை.

யோசேப்புவின் இறப்பு நாளாக கருதி அனுசரித்தார்கள். ஆயினும் 1324ல்தான் முதல் முறையாக மார்ச் 19ம் நாள் யோசேப்புவின் திருநாளாக கொண்டாடப்பட ஆரம்பித்தது. 15ம் 16ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புனிதைகளாக புனித பேணடீன், புனித அவில்லா திரேசம்மாள் போன்றோர் யோசேப்புவின்பால் மிகுந்த பக்தி கொண்டிருந்தனர்.

1479ல் திருத்தந்தை 4ம் சிக்துஸ் உரோமையில் யோசேப்புவின் திருநாளைக் கொண்டாடிய பின்னர்தான் இந்நிகழ்வு பரவலாகக் கொண்டாடப்பட்டது. இப்படியான நிலையில் 1870ம் ஆண்டு டிசம்பர் 8ம் நாள் திருத்தந்தை 9ம் பத்திநாதர் தூய யோசேப்புவை திருச்சபையின் பாதுகாவலராக அறிவித்ததைத் தொடர்ந்து அவர் பற்றிய பக்தி முயற்சிகள் உலகளாவ பரவின.

1870ம் ஆண்டு டிசம்பர் 8ம் நாள் திருத்தந்தை 9ம் பத்திநாதர் தூய யோசேப்புவை திருச்சபையின் பாதுகாவலராக அறிவித்ததைத் தொடர்ந்து அவர் பற்றிய பக்தி முயற்சிகள் உலகளாவ பரவின.

அவர் தொழிலாளரின் பாதுகாவலர் என்றும் போற்றப்படுகின்றார். சகோ. அன்றூ என்பவரால் 1904ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கனடா, மொன்றியல் நகரிலுள்ள தூய யோசேப்பு பேராலயம் இவரின் பக்தியின் மையமாக திகழ்கிறது என்று கூறலாம்.[17]

## 7. முடிவுரை:

தூய யோசேப்பு பற்றிய சில விடயங்களை நற்செய்தி ஏடுகளிலிருந்தும், நற்செய்திக்குப் புறம்பான நூல்களிலிருந்தும் பெறும் தகவல்களின் அடிப்படையில் இக்கட்டுரையில் படித்தோம். திருச்சபையின் மூலைக் கல்லாக அதன் நிறுவுனராக இருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் பாதுகாவலராக விளங்கிய தூய. யோசேப்பு திருச்பையின் பாதுகாவலராக இருப்பது மிகவும் பொருத்தமானதென்பதை நாம் உணர்கிறோம். இறை அருளைப் பெற்றுத் தருவதில் மிகுந்த வல்லமையுள்ளவராக விளங்கும் இவரை எம் வாழ்விலும் எமக்காக பரிந்துரைப்பவராகக் கொண்டு வாழ்வோம்.

[தூய யோசேப்பு பற்றிய இறையியல் கண்ணோட்டக் கட்டுரை (யோசேப்புவியல் / Josephology) அடுத்த இதழில் வெளியாகும்.]

---

17 Cf. Filas. F.L., St. Joseph, New Catholic Encyclopedia, Vol.7. Pg. 1108-1109

# மெசியா பற்றிய நம்பிக்கை விவிலியப் பார்வையில்

அருட்சகோ. அ. இயூஜின் அமலராஜ்

## முன்னுரை:

அந்நிய ராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் அடிமைகளாக்கப்பட்டு களைப்படைந்து, வாழ்வின் வெறுமையின் விளிம்பில் சலிப்போடு வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரயேல் மக்களுக்குத்தான் "மெசியா" பற்றிய நம்பிக்கைதரும் வாக்குறுதிகள் வளங்கப்படுகின்றன. கிறிஸ்துவிற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பு வளங்கப்பட்ட "மெசியா பற்றிய நம்பிக்கைகள் கிறிஸ்துவின் காலத்தில் மட்டுமல்ல அப்போஸ்தலர்கள் காலத்திலும் பரவலாகப் பேசப்பட்டு வந்தன" ஏன் இன்றைய காலத்திலும் "மெசியா" பற்றி கிறிஸ்தவர்கள் பேசுவதை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அப்படியானால் அதன் உண்மைத் தன்மை, பொருள் என்ன என்று பார்ப்பது இன்றைய காலத்தில் பொருத்தமானதாகும்.

> "மெசியா பற்றிய நம்பிக்கைகள் கிறிஸ்துவின் காலத்தில் மட்டுமல்ல அப்போஸ்தலர்கள் காலத்திலும் பரவலாகப் பேசப்பட்டு வந்தன"

எபிரேயம், அரமேயிக் ஆகிய மொழிகளின் சொல்லான "மெசியா" வும், கிரேக்கச்சொல்லான "கிறிஸ்து" வும் "அபிசேகம் செய்யப்பட்டவர்" என்ற பொருளைக் குறிக்கின்றன. இக்கருத்துப்பட "மெசியா" என்ற பதம் 130 தடவைகள் பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இச்சொல் பொதுவாக அரசன் அல்லது குரு அல்லது இறைவாக்கினர் போன்றவர்களை அபிசேகம் செய்து அப்பதவிகளில் அமர்த்துவதை குறிக்கப் பயன்பட்டது என்பது பலரது கருத்து. ஆனால் "மெசியா" என்ற சொல் நாம் கருதும் "எதிர்கால மீட்பரை" குறிக்கப் பயன்படுத்தப்பட்டனவா என்பதில் பலர் வேறுவேறான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

## "மெசியா" என்ற பதமும் எபிரேய விவிலியமும்

யூத அறிஞர் மோசேவ் பி. விஸ்ஸர் (Moses B. Wisser) என்பவர் மெசியா என்ற பதம் 5 அர்த்தங்களில் எபிரேய மொழி விவிலியத்தில் பயன்படுத்தப்பட்டது என்று கூறுகின்றார்.

1) "யாவே" என்ற கடவுளுடன் தொடர்புபடுத்தப்பட்டு அவரது பிரதிநிதியாக ஆட்சி செய்கின்றவரை குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்றும் (1 சாமு 2:10,35, 12:3,5 16:6,9,11,16, 2 சாமு 1:14, 16, 19:23)

2) அடிமைத் தனத்திற்குப் பிற்பட்ட காலத்தில் தலைமைக் குருவை குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்றும் (தானி 9:25-26, லேவி 3:5, 6:5) உதாரணமாக அனியாஸ் (Onias) III என்ற குருவை மெசியா என்றழைத்தனர்.

3) சைரசு என்ற புறவினத்து அரசனுக்கு "மெசியா" என்ற பதம் கொடுக்கப்பட்டது என்றும் (எசா 45:1)

4) பிதாப்பிதாக்களை சங்கீத ஆசிரியர்கள் மெசியா என்று அழைத்தார்கள் என்றும் (சங். 105:15)

5) இஸ்ரயேல் இனத்தைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்பட்டது என்றும் (அப் 3:13 சங் 24:8 , 84:10) வேதாகம சான்றுகளுடன் காட்டுகின்றார்.

இதனைவிட V.H.ஸ்ரான்சன் (V.H.Santon) என்பவர் "மெசியா" தன்மையை மூவருக்கு சாற்றி காட்டுகின்றார்.

1. இறைவாக்கினரை மெசியா என்றும் இணை ச.18:15)
2. துன்புறும் ஊழியரை "மெசியா" என்றும் (எசா 42: 1-9, 49:1-7 , 50:4-11 52:13-15)
3. மனுமகனை "மெசியா" என்றும் (தானி 7:13) காட்டுகின்றார்.

ஆனால் உண்மையில் பல அறிஞர்கள் "மெசியா" என்ற பதமும், மெசியா பாரம்பரியமும் யூதேயா நாட்டு அரச குல வீழ்ச்சியோடு விசேசமாக இஸ்ரலேயர் நாடுகடத்தப்பட்ட வேளையிலிருந்து(587-537கி.மு.) தோன்றியது என்கிறார்கள்.

ஆதலினால் "மெசியா" பற்றிய நம்பிக்கை சமூக - அரசியல் கண்ணோட்டத்திலும் அரச வம்ச சூழமைவிலும் ஆராயப்படவேண்டும் என்கின்றனர்.

## இறைவாக்கினர்களின் பார்வையில் மெசியா பற்றிய நம்பிக்கை

அடிமைத்தனத்திற்கு பின்பு அரசனில்லாது, உருப்படியான சமூக, சமய அமைப்பு முறை இல்லாது வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கினர்களின் "மெசியா" பற்றிய நம்பிக்கை வாழ்வளித்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப்பதம் வெளிப்படுத்திய உண்மைத்தன்மை, பொருள் என்பன காலத்துக்குக் காலம், இடத்திற்கிடம், சூழலுக்கு சூழல் வேறுபட்டு காணப்பட்டது.

1) மெசியா என்ற பதம் அரசியல் மீட்பருக்கு அதுவும் புறவினத்து அரசனான சைரசுக்கு வழங்கப்படுகின்றது. (எசா 45:1)

2) இறைவாக்கினர்கள் எதிர்கால மீட்பைப் பெற்றுத்தரும் முக்கிய நபர்களாகக் கருதப்பட்டனர். உதாரணமாக காக்காய் (Haggai) என்ற இறைவாக்கினர் தாவீது கோத்திர அரசியல் அலுவல்களில் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக செருபாபேல் (Zcrubbvabel) என்ற யூதா நாட்டு அரச அலுவலருடன் (Peisian appointed Davidic governor) தொடர்புகளை வைத்திருந்தார்.(Hag 2:1-9), (Hag 2:20-23) பெரும் துன்ப வேதனைகளுக்குப் பிறகே எதிர்கால விடுதலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. (ஆமோ 9:11-12, 5:16-17 ஒசே3:4-5, எசா 2:2-4 , 11:1-6, மிக் 2:12, செப் 3:19-20)

3) இறைவாக்கினர் எசாயா "மெசியா" பற்றிய நம்பிக்கையை இம்மானுவேல் என்ற பதத்தின் மூலமாகவும், அவர் தாவீது வீட்டிலிருந்தும் உதிப்பார் என்றும் வெளிப்படுத்துகின்றார். (எசா 7:14, 11:1-9) இவையனைத்தும் "மெசியா" தாவீது வீட்டிலிருந்து தோன்று வார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியது.

4) இறைவாக்கினர் எரேமியா கூறும்போது "மெசியா" தனியே அரசியல் விடுதலையை மட்டும் அல்லாமல் உள்ளார்ந்த மனமாற்றத்தை ஏற் படுத்தும் அரசனாக அமைவார் என்கின்றார்.

> இறைவாக்கினர் எரேமியா கூறும்பொழுது "மெசியா" தனியே அரசியல் விடுதலையை மட்டும் அல்லாமல் உள்ளார்ந்த மன மாற்றத்தை ஏற்படுத்தும் அரசனாக அமைவான் என்கின்றார்.

(எரே 31:31–34) தொடர்ந்து அவ்வரசன் தெய்வபயம் கொண்டு மக்களை வழிநடத்துவார் என்கின்றார்.

5) எசேக்கியேல் இறைவாக்கினர் மெசியாவை தாவீது கோத்திரத்திலிருந்து வரும் எதிர்கால மீட்பராகக் கருதுகின்றார். (எசே 37:24–25)

6) 2வது எசாயா இறைவாக்கினர் மெசியாவை மற்றவர்களுக்காக, மனித குல மீட்புக்காக துன்புறும் ஊழியனாகக் காட்டுகின்றார். (எசா 52:13–53:12)

7) தானியேல் இறைவாக்கினர் உலகின் மேல் சகல அதிகாரங்களும் வழங்கப் பெற்ற மனுமகனாக "மெசியாவை" காட்டுகின்றார். (தானி 7:13–14)

மேற்கூறப்பட்ட அனைத்து இறை வாக்குகளும் அபிசேகம் செய்யப்பட்டவர் கொண்டுவரும் எதிர்கால மீட்பைச் சுட்டிக் காட்டுகின்றது.

அரசியல் விடுதலையிலிருந்து மனமாற்றம், வாழ்க்கையின் புதுப்பித்தல் நிலைக்கு "மெசியா" நம்பிக்கை படிப்படியாக மாறிச் செல்வதைக் காணலாம்.

ஆனால் அரசியல் விடுதலையிலிருந்து மனமாற்றம், வாழ்க்கையின் புதுப்பித்தல் நிலைக்கு "மெசியா" நம்பிக்கை படிப்படியாக மாறிச் செல்வதைக் காணலாம்.

உ+மாக எசா 11:2–4, மிக். 4:4 என்பன அரசியல் சமூக விடுதலையையும் அதற்கான மதிப்பீடுகளையும் பற்றிப் பேச எரே 31:30, 32:36–44 எசே 2:4, 11:19, 18:31, 32:9, 36:26 போன்றவைகள் வாழ்வின் மன மாற்றத்தை / புதுப்பித்தலைப் பற்றிப் பேசுகின்றது.

## சங்கீதங்களின் பார்வையில்

பாப்லோனிய அடிமைத் தனத்திற்கு முன் எழுதப்பட்ட சங்கீதங்கள் "அரச மெசியா" இஸ்ரயேல் மக்களின் வாழ்விலும் விசுவாசத்திலும் சிறப்பான இடம் வகுத்ததாகக் கூறுகின்றன. மெசியா பெற்ற அபிசேகம் இறைவன் அவரிடம் காட்டும் தனிச்சலுகையின் அடையாளமாகும் என்கிறது. (சங். 45:8) அவரை யாவேயின் சுவிகார மகனாக்குவதும் இவ்வபிசேகமே என்கின்றது. (சங். 2:7) அதிகமான சங்கீதங்கள் இஸ்ரயேல் மக்கள் ஒரு அரசன் இல்லாமல் வாழ்ந்தபோது

அவர்களது எதிர்பார்ப்புக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய விதத்தில் தாவீது வீட்டிலிருந்து மெசியா தோன்றுவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி வழிநடத்தின. சங்கீதப் புத்தகங்களின் அமைப்புக்கள் ஒவ்வொன்றும் எதிர்கால மெசியாவிற்கான நம்பிக்கையைத் தூண்டும் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மெசியா பற்றிய நம்பிக்கையின் எண்ணக்கரு படிப்படியாக தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து முதிர்ச்சியடைந்த ஒன்றல்ல. மாறாக சமூக, அரசியல், சமய கட்டமைப்பு ஒன்று இல்லாமலும் சிதறிக்கிடந்த மக்களை ஒன்று சேர்த்து வழிநடத்த ஒரு அரசன் இல்லாத காரணத்தினாலும் கிரேக்க – உரோம உலகத்தில் தோன்றிய பல்வேறு வகையான பிரச்சனைகளுக்கு உறுதியான தீர்வைக் கொடுக்கும் முகமாக ஒரே தெய்வ கோட்பாட்டின் அடிப்படையில் பிறந்த நம்பிக்கை ஆகும். மேற்கூறப்பட்ட பிரச்சனைகளுக்கு ஐந்நூலில் எந்தத் தீர்வும் கிடையாததினால் இந்நம்பிக்கை தோன்றியது.

> சங்கீதப் புத்தகங்களின் அமைப்புக்கள் ஒவ்வொன்றும் எதிர்கால மெசியாவிற்கான நம்பிக்கையைத் தூண்டும் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

## மெசியாவும் யூதமும்:

மெசியா பற்றிய கருத்து எப்பொழுதும் யூதத்தின் பிரிக்கமுடியாத பகுதி என்று யூதப் பாரம்பரியம் கூறுகின்றது. வில்லியம் கோட் பறி என்ற விவிலிய அறிஞரும் மேற்கூறப்பட்ட கருத்தை ஏற்றுக் கொள்கின்றார். "மெசியா" பற்றிய எண்ணக்கரு ஆரம்பத்திலிருந்தே யூதத்தின் மையமாக விளங்குகின்றது என்று கூறுகின்றார்.

## இயேசுவும் மெசியாவும்:

ஆதிக் கிறிஸ்தவர்கள் மெசியா பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இயேசுவையே மெசியாவாக கருதினார்கள். இயேசுவின் மெசியாத் தன்மை அவர் இறையரசைப் போதித்து அதைப் பற்றி விளங்கப்படுத்துகின்ற கற்பித்தல் நிலையாலேயே ஏற்பட்டது என்கிறார்கள். (மாற் 9:41, மாற் 14:61–62) ஆனால் கோன் சேர்பக் (Chon - Sherbock) என்பவர் இயேசு தன்னை மெசியா என்று உரிமை கோரினாரா என்பது சந்தேகத்திற்கிடமானது என்கின்றார். நான்காம் நற்செய்தியாளனரான யோவான் மாத்திரமே இயேசுவுக்கு மெசியா என்ற தலைப்பை கொடுக்கின்றார். (யோவா 1:41, 4:25)

கோன் சேர்பக்கின் கருத்துப்படி யூதர்கள் இயேசுவின் மெசியாத் தன்மையை மறுப்பதற்கு 5 காரணங்களை முன் வைக்கின்றார்.

1) இயேசு, விவிலியத்தில் குறிப்பிட்டதன்படி மெசியாவுக்கான எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யவில்லை.

உ+ம் :- சிதறி வாழ்ந்த யூதர்களை ஒன்று சேர்க்கவில்லை.
தாவீதின் அரசை மீளக் கொண்டுவரவில்லை.

2) அணுகமுடியாத/உச்சரிக்கமுடியாத கடவுளுடன் (யாவே) இயேசு கொண்டிருந்த உறவுமுறை யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது, நினைத்துப் பார்க்க முடியாதது. (மத். 11:27, யோ 14:6–7)

3) பாவிகள் (பாவம் செய்தவர்) பாவம் பற்றிய இயேசுவின் மனநிலை யூதர்களால் ஏற்றுக் கொள்ளமுடியாதது.

பாவியை அல்லது பாவங்களை மன்னிக்கும் செயல் யூதர்கள் மட்டில் தேவ நிந்தனையாக்கப்பட்டது. (மத் 9:5–6 யோவா 5:18–21)

4) இயேசுவின் மறுவுலக வாழ்வு பற்றிய போதனை யூதர்களது இவ்வுலக தாவீதின் ஆட்சி பற்றிய நம்பிக்கைக்கு எதிரானது.

யூதர்கள் தாம் இழந்த அரசியல் சமய, சமூக சுபீட்சத்தை அல்லது அரசுரிமைகளை மெசியாவின் வருகையில் எதிர்பார்த்திருந்தனர்.

5) இயேசுவின் ஐந்நூலைப் பற்றிய விளக்கம் அதைப் பற்றிய போதனை யூத போதகர்களின் (ரபி) போதனைகளைவிட முற்றிலும் வித்தியாசமாகவிருந்தது. (மத் 5:17 , 12:1–4 , லூக் 13:10–16)

## முடிவுரை

இயேசுவின் இரண்டாம் வருகைக்காக காத்திருக்கின்ற நாம் உண்மையில் மெசியாவின் காலத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர் வெளிப்படப் போகும் நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் நாம் படுகின்ற துன்பங்களும் துயரங்களும், சாவுகளும் நோவுகளும் நாம் அனுபவிக்கப் போகும் மகிமை நிறை முடிவுக்கான ஊடகங்களே. (Means). எவ்வாறு நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தன் உடல் உள வேதனையிலும் கொடூரக் கொலை வெறியாட்டத்

திலும் தந்தைக்கும் அவரது அழைப்பிற்கும் பிரமாணிக்கமாகவிருந்து தமது மாட்சிமையை அடைந்தாரோ அதே போல நாமும் நம் இன்றைய கால மரண பயத்திலும், பட்டினியிலும், ஆட்கடத்தல், கொள்ளை போன்ற தீமைகளின் மத்தியிலும் தந்தைக்கும் அவரது அழைப்பிற்கும் பிரமாணிக்கமாய் வாழ்ந்து கிறீஸ்து காட்டிய வழியில் எம் பயணத்தை தொடர்வோமானால் நாமும் மெசியாவின் மகிமை நிறை வருகையை அனுபவிப்போம். அவரோடு சேர்ந்து நாமும் மகிமையடைவோம். துன்பங்கள் எம்மை வருத்தி அழிப்பதற்கல்ல. மாறாக நிறைவாழ்வை அளிப்பதற்கே. ஆதலினால் கிறிஸ்தவர்களாகிய நாம் தமிழர் வரலாற்றின் முக்கிய கட்டத்தில், வேதனை நிறைந்த இக்காலத்தில் திருவிவிலியம், செபமாலை போன்ற சக்திமிகு ஆயுதங்களை கையிலெடுத்து களமாடுவதைவிட வேறு வழி இல்லை. இந்த அவசர வரலாற்றுத் தேவையையும் கடமையையும் செய்ய ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம்.

**துணை நின்ற நூல்கள்:**


1) விவிலியக் களஞ்சியம் VI
2) Vidyagyothi December 2005.
3) The men and the message of the OT. by Peter F. Ellis. CSSR, STL, SSL
4) The Dead Sea Scrolls and Christian Origins by Joseph A. Fitgmyer SJ.


நான்கு வருடங்களாக எமது குருமடத்தில் விரிவுரையாளராகவும், இறையியல் கோலங்கள் சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் இருந்து சஞ்சிகையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் ஆலோசனையும், ஒத்துழைப்பும் வழங்கிய அருட்தந்தை பி. கிறிஸ்துநாயகம் அடிகளார் தற்போது மாற்றலாகி தன்னுடைய சொந்த மறை மாவட்டமான மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றச் சென்றுள்ள அடிகளாரை வாழ்த்தி நன்றி கூறுவதோடு அவரது எதிர்காலப் பணி சிறக்கவும் இறைவனின் அன்பும் அருளும் பராமரிப்பும் தொடர்ந்தும் நிறைவாகக் கிடைக்க இறையருள் வேண்டி வாழ்த்துகிறோம். – நிர்வாகக் குழு

# மரியாளும் பக்தி முயற்சிகளும்

அருட்சகோதரி [illegible] தி.க.

## மரியாள் பக்தியும் - .நோக்கமும்

பக்தி என்பது பரவச நிலையல்ல. மாறாகப் படைத்தவரோடு படைப்புக்கள் ஒன்றித்து அவராக மாறும் தெய்வீக அனுபவமாகும். இந்த அடிப்படையில் மரியாள் பக்தியை நோக்கில், – மரியாள் பக்தி என்பது மரியாளின் நற்பண்புகளைப் போற்றி, அவர் கற்றுத் தந்த உண்மை வழியில் நடந்து அவரின் சாயலைப் பிரதிபலிப்பதேயாகும். திருச்சபையால் அருளப்படும் மரியாவின் திருநாம விழாக்கள், திருத்தல யாத்திரைகள், மன்றாட்டு மாலைகள், நவநாட்கள், வணக்க மாத வழிபாடுகள், சனிக்கிழமை, முதற் சனிக்கிழமைப் பக்தி. மரியாளுக்குரிய வாய்ச் செபங்கள், மனவல்லபச் செபங்கள், செபமாலை மறை உண்மைகள், பரிசுத்த பொருட்கள் (உத்தரியம், செபமாலை, சுரூபங்கள், உருவப்படங்கள், வரவணிக்கம்) போன்றவை மரியாளின் பக்தியில் வளர துணை செய்கின்றன.

பக்தி என்பது பரவச நிலையல்ல. மாறாகப் படைத்தவரோடு படைப்புக்கள் ஒன்றித்து அவராக மாறும் தெய்வீக அனுபவமாகும்.

திருவழிபாட்டு ஆண்டு காலச்சக்கரத்தில் இயேசுவின் மறையுடலாம் திருச்சபை, கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றம், தூயஆவியின் வருகை, ஆண்டவரின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருத்தல் போன்ற மறையுண்மைகளை கொண்டாடி வருகின்றது. இம்மறைநிகழ்வுகள் நிறைவடைய, மனுவுருவான இயேசுவின் மீட்புப் பணியில் பிரிக்கமுடியாத பங்கும்,

நெருங்கிய தொடர்பும் வகித்தவர் இறைவனின் அன்னையும், மனுக்குலத்தின் தாயுமான தூய கன்னிமரியாவேயாகும். இந்த அன்னை இறைவனின் திட்டத்தில் 'முன்குறிக்கப்பட்டவராக'. (உரோ8:30) 'அருள் நிறைந்தவராக' (லூக் 1:28) 'பேறுபெற்றவராக' (லூக் 1:45) 'இறை அடிமையாக' (லூக்1:38) 'உடன் இரட்சகியாக' (கலா 4:4) விவிலியத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றார். இந்த உண்மைகளை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவேதான் பாரம்பரியங்களைக் கண்ணும் கருத்துமாக பேணிக் காத்துவரும் திருச்சபை, மரியன்னையின் பக்தியில் இறைமக்களை வளர்ப்பதில் தன் பங்களிப்பை நிறைவாகச் செய்து வருகின்றது. இதற்காகவே ஆண்டின் முதல் மாதத்தின் தொடக்க நாளிலிருந்து ஆண்டின் இறுதி மாதம் வரை மரியன்னையின் வாழ்வின் பல நிகழ்வுகளைத் தெரிந்தெடுத்து அதற்கான விழாக்களையும், திருச்சபை ஒழுங்கமைத்திருக்கின்றது. அவை முறையே – இறைவனின் அன்னை மரியாள், – லூர்து அன்னை, – மரியாளுக்கு மங்கள வார்த்தை அறிவிப்பு. – மரியாள் எலிசபேத்தை சந்தித்தல், – கார்மேல் அன்னை, – மரியாவின் விண்ணேற்பு, – விண்ணக, மண்ணக அரசியாக முடிசூட்டு, – கன்னிமரியாளின் பிறப்பு, – வியாகுல அன்னை, – புனித. செபமாலை அன்னை, – மரியாளை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல், – புனித. கன்னிமரியின் அமல உற்பவம் என்று ஒவ்வொரு மாதமும் அன்னையை நினைவு கூர்ந்து விழாக்களை எடுப்பதுடன், மரியாள் மட்டில் இறைமக்களுக்குரிய அன்பையும். பக்தியையும், வணக்கத்தையும் அன்றிலிருந்து இன்று வரை வளர்த்தும் வருகின்றது.

## மரியாள் பக்திக்கு - ஓர் சவால்

திருச்சபை வரலாற்றில் கிபி 5ம் நூற்றாண்டு முதலே மாதா பக்தி ஆரம்பமாகி வளர்ந்து வந்தது. 16ம் நூற்றாண்டில் அன்னையின் பக்திக்கு எதிராகப் பல சவால்கள் எழுந்தன. பிரிந்து போன சபைகள் சிறப்பாக மாட்டீன் லூத்தர் போன்ற சமய சீர்திருத்தவாதிகள் அன்னையின் பக்தியை புறக்கணித்தனர். இக்காலக்கட்டங்களில் அன்னையின் பக்தி பாதிப்புக்குள்ளாகியது. அன்னையின் திருவிழாக்கள் குறைக்கப்பட்டன. செபமாலை தியானங்கள் புறக் கணிக்கப்பட்டன. புனித தலங்கள் கைவிடப்பட்டன. இவ்வேளைகளில் மரியன்னை தன் மக்களைக் கைவிடவில்லை. திருத்தந்தையர்களின் இறையியல் கருத்துக்களாலும், தன் பரிந்துரையாலும், பல்வேறு இடங்களில் பல காட்சிகள் மூலம் தன்னை வெளிப்படுத்தி திருச்சபைத் தலைவர்களையும், இறைமக்களையும் உறுதிப்படுத்தி, கத்தோலிக்க விசுவாசத்திலும், தம் பக்தியிலும் வளர துணைபுரிந்திருக்கின்றார்.

## மரியாள் பக்தி - திருச்சங்க நோக்கு

"தொடக்க திருச்சபையும், கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோர் சமூகமும் மரியாவை – கடவுளின் தாய்' என்று அழைத்து வணங்கினர். தங்கள் துன்பங்கள், தேவைகள் அனைத்திலும் அவரை மன்றாடி, அவரது அடைக்கலத்தில் புகலிடம் அடைந்தனர். (திருப்பணி 1:14, யோவான் 2:3) மரியா தன் மகனுக்குப் பிறகு, எல்லா வானதூதர்களுக்கும், மனிதர்களுக்கும் மேலாக கடவுளின் அருளால் உயர்த்தப்பட்டவரும், கிறிஸ்துவின் மறைநிகழ்ச்சி களில் பங்கெடுத்தவருமாக விளங்குகின்றார். எபேசு திருச்சங்கத்திற்குப் பிறகு, வியத்தகு முறையில் கடவுளின் மக்கள் மரியாவை அதிகமதிகம் வணங்கவும், அன்பு செய்யவும், உதவிக்கு அழைக்கவும், கண்டு பாவிக்கவும் முற்பட்டனர்.

> திருச்சபை என்னும் கிறிஸ்துவின் மறைஉடலின் உறுப்புக்களாகிய இறைமக்கள் மரியாவுக்கு அளிக்கும் வணக்கம் தனிப்பட்டதும், சிறப்பு வாய்ந்ததுமாகும்.

திருச்சபை என்னும் கிறிஸ்துவின் மறைஉடலின் உறுப்புக்களாகிய இறைமக்கள் மரியாவுக்கு அளிக்கும் வணக்கம் தனிப்பட்டதும், சிறப்பு வாய்ந்ததுமாகும். மனிதரான வாக்குக்கும், தந்தைக்கும், தூயஆவிக்கும் நாம் அளிக்கும் ஆராதனையை இவ்வணக்கம் மிகச் சிறந்தவிதமாய் ஊக்குவிக்கும் எனலாம். திருச்சபை கால, இட, சூழ்நிலைகளையும், நம்பிக்கை கொண்டோரின் குணஇயல்புகள், மனநிலைகள் ஆகியவற்றையும் மனதில் கொண்டு வழுவற்ற மரபுக் கோட்பாட்டிலிருந்து மாறுபடாத இறையன்னைக்குரிய பல்வகையான பக்திமுயற்சிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பக்தி முயற்சிகளின் பயனாக நாம் தாயைப் பெருமைப்படுத்தும்போது, மகனை அறிந்து, அன்பு செய்து மாட்சிப்படுத்து கின்றோம். அவர் கட்டளைப்படி நடக்கின்றோம். (திருச்சபை எண் – 66)

## மரியாவும் - செபமாலைப் பக்தியும்

மரியாவின் பக்திமுயற்சிகளில் மிகச் சிறப்பும், வல்லமையும், சக்தியும் வாய்ந்ததாக விளங்குவது செபமாலைப் பக்தி என்றால் அது மிகையாகாது. விண்ணகம் செல்லும் ஏணியாகவும், இருள்சூழ் வேளைகளில் விசுவாச வாழ்வுக்கு அச்சாரமாகவும் விளங்கும் செபமாலையைத் தியானிக்கையில், நமது கத்தோலிக்க விசுவாசத்தை அறிக்கையிடுகின்றோம். கிறிஸ்து கற்பித்த செபத்தின் மூலம்

வானகத்தந்தையின் பாதுகாவலைப் பெரிதும் உணர்கின்றோம். ஒன்றுகூடிச் செபமாலை சொல்லும்போது குடும்பத்தில் ஒற்றுமை, அமைதி, அன்பு, அருள் ஆகிய அனைத்தும் இறைவனால் அருளப்படுவதை உணர்ந்து மனநிறைவு அடைகின்றோம். உத்தரிக்கின்ற ஆத்துமாக்களின் இளைப்பாற்றிக்காக வேண்டுகின்றோம். செபமாலையில் வரும் மறைஉண்மைகளைச் சொல்லித் தியானிக்கையில் விவிலிய அறிவைப் பெறுகின்றோம். மேலும் மரியன்னையும் தன் காட்சிகளிலெல்லாம் செபமாலை சொல்லும்படி பணித்திருப்பதை நாம் அறிகின்றோம். குறிப்பாக 13ம் நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் 'ஆல்பிஜன்ஸ்' என்னும் பதிதக் கொள்கையினர் இயேசுக்கிறிஸ்துவின் திருவுடலாம் திருச்சபைக்கு அதிக துன்பமும், வேதனையும், பாதிப்பும் கொடுத்ததோடு, கிறிஸ்தவர்களையும் கொன்று குவித்து, இன்பம் கண்டனர். இத்தருணத்தில் புனித கன்னிமரியாள் புனித சாமிநாதருக்குக் காட்சி கொடுத்து. தன் கையிலிருந்த செபமாலையைக் காண்பித்து, செபிக்கும் முறையையும் அருளினார். மேலும் அவர் கூறுகையில் "செபமாலை அறநெறிகளையும், நற்செயல்களையும் வளர்க்கும். ஆன்மாக்களுக்கு இறைவனின் இரக்கத்தை அதிகமாகப் பெற்றுத் தரும். செபமாலையை விடாமல் அன்போடு சொல்லி வருபவர்களுக்கு என்னுடைய தனிப்பட்ட பாதுகாவலையும், அருட்கொடைகளையும் வழங்குவேன். செபமாலை, உத்தரியம் இவற்றைக் கொண்டு ஒருநாள் உலகைக் காப்பாற்றுவேன்" என்ற வெளிப்படுத்துதல்களைக் கொடுத்து உறுதிப்படுத்தினார்.

செபமாலை
அறநெறிகளையும்,
நற்செயல்களையும்
வளர்க்கும்.
ஆன்மாக்களுக்கு
இறைவனின் இரக்கத்தை
அதிகமாகப் பெற்றுத்
தரும்.

## மரியாள் பக்தியில் - புனிதர்கள்

புனிதர்கள் தங்கள் வாழ்வின் மாதிரிகையாக மரியாளைக் கண்டு பாவித்ததுடன் அவள் மீது தாம் கொண்ட பக்தியினால் அவளிடமிருந்து தாம் பெற்ற பாதுகாப்பு, சக்தி, இரக்கம் என்பவற்றின் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்தியுமிருக்கின்றார்கள். உதாரணமாக "கன்னிமரியாள் ஒற்றுமையின் அன்னை. அவள் வழியே மாந்தர் அனைவரும் திருச்சபைக்கு பிறந்தார்கள்" என்று புனித. அகுஸ்தீனாரும், "பாவிகளே! அஞ்ச வேண்டாம். உங்களுடைய துன்பங்களிலும், தேவைகளிலும் அன்னையை நாடுங்கள். அவள் உதவியைத் தேடுங்கள். அவள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றாள்" என்று புனித. பசிலும், "கரை தெரியா மரக்கலம் கலங்கரை

விளக்கைக் கண்டு களிப்புற்று விரைவில் கரை சேருவதுபோல், நமது வாழ்க்கைக் கடலில் கலங்கரை விளக்காய் ஒளிவீசி நம்மைக் கரை சேர்ப்பவர் அன்னை மரியா" என புனித. பெர்னாந்தும், "ஏவாளைத் தொடர்ந்து அருளும் இடர்பாடும் அருளும், மரணமும் வந்தன. மரியாளைத் தொடர்ந்து அருளும், ஒளியும்: அன்பும், வாழ்வும் வந்தன. ஏவாள் அலகையினால் ஆட்கொள்ளப்பட்டாள். மாறாக அலகையையே ஆட்டிப் படைத்தாள் மரியாள்" என புனித. புரூனோவும் குறிப்பிடு கின்றார்கள். இவ்வெளிப்படுத்தல்கள் மரியாள் மட்டில் புனிதர்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும், பக்தி வேகத்தையும் சுட்டிக் காட்டுகின்றன.

> "கரை தெரியா மரக்கலம் கலங்கரை விளக்கைக் கண்டு களிப்புற்று விரைவில் கரை சேருவதுபோல்,நமது வாழ்க்கைக் கடலில் கலங்கரை விளக்காய் ஒளிவீசி நம்மைக் கரை சேர்ப்பவர் அன்னை மரியா"

## நிறைவாக

மரியாளின் பிள்ளைகள் நாம் அனைவரும் திருச்சபையின் வழிநடத்துதல் களையும், அறிவுரைகளையும், பாரம்பரிய உண்மைகளையும் கருத்தில் கொண்டு மரியாளின் பக்தியில் வளர்வோம். அனைவரையும் கிறிஸ்துவில் சகோதரர்களாக ஏற்று, மதித்து, மன்னித்து, அன்புசெய்வோம். உள்ளதைப் பகிர்வோம். மரியன்னையின் பண்புகளைத் தாங்கிச் செல்லும் நம்பிக்கையின் நட்சத்திரங்களாவோம். புதிய வானகமும், புதியவையகமும் படைக்கும் சிற்பிகளாக மிளிர்வோம். மரியன்னையின் புகழ் பாடுவோம், மரியன்னையின் பக்தியை அழியாது காத்து உறுதியுடன் வளர்ப்போம்.

> திருச்சபையின் வழுவற்ற மரபுக்கோட்பாடுகளிலிருந்து மாறுபடாத இறையன்புக்குரிய பக்திமுயற்சிகளினால் நாம் மரியன்னையைப் பெருமைப்படுத்துகின்றோம். அவர் மகன் இயேசுக்கிறிஸ்துவை அறிந்து, அன்பு செய்து மாட்சிப்படுத்துகின்றோம். இறைவிசுவாசத்தில் ஊன்றி இறைசித்தப்படி நடக்கின்றோம்.

**துணை நின்ற நூல்கள்:**

1. விவிலியக் களஞ்சியம்
2. 2ம் வத்திக்கான் சங்கம்
3. புதிய ஏவாள் (அருட்பணி. பீட்டர்)
4. இயேசுவின் அன்னை நம் அன்னை (பக் 117 - 132, பக் 111)

# பரிசுத்த திருத்தந்தையர்களின் திருமடலில் அன்னை மரியா பற்றிய குறிப்புக்கள்

அருட்சகோ. அ. கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ

## முன்னுரை

அன்னை மரியா தன் உடலிலும் உள்ளத்திலும் கடவுளின் வார்த்தையை ஏற்று வாழ்ந்தவர். எனவே அவர் உண்மையாகவே கடவுளும் மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக் கொள்ளப்பெற்றுப் போற்றப் பெறுகிறார். தம் மகளின் பேறு பலன்களால் முன்னரே அவர் சீரிய முறையில் மீட்கப்பெற்று, நெருங்கிய, பிரிக்கமுடியாத முறையில் அவரோடு இணைக்கப்பெற்று இருக்கிறார். இறைமகனின் தாய் என்ற இந்த உன்னத நிலையாலும் பெருமையாலும் அணி செய்யப்பெறுகின்றார். இதன் காரணமாக இறைவனும் எம் தந்தையுமானவருக்கு மிகவும் உகந்த மகளாகவும் தூய ஆவியின் திருக்கோயிலாகவும் திகழ்கின்றார். உண்மையிலேயே அவர் கிறிஸ்துவின் உறுப்பினரான நம்பிக்கை கொண்டோர் திருச்சபையிலே பிறக்கும்படி அன்பினால் அவர் ஒத்துழைத்தார். இதனால்தான் தொன்று தொட்டு கத்தோலிக்க திருச்சபையும் தூய ஆவியினால் கற்பிக்கப்பெற்று, பிள்ளைக்குரிய வாஞ்சையோடும், பற்றோடும் அன்பு மிகுந்த தாயாக அவரை ஏற்றிப் போற்றுகின்றது. அன்னையின் அளவுகடந்த மாண்பினையும், மகத்துவத்தையும், புனிதத்துவத்தையும், தூய நிலையையும் திருச்சபையின் பரிசுத்த திருத்தந்தையர்கள் தங்களுடைய பல திருமடல்களில் குறிப்பிட்டுள்ளமை கண்கூடு ஆகும். அவற்றுள் சில முக்கியமானவைகளைப் பற்றி அறிந்து கொள்வது சாலச் சிறந்தது.

## 1. ADIUTRICEM - திருச் செபமாலையின் புகழ்

இந்தத் திருமடலானது 1895ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ம் திகதி அப்பொழுது பரிசுத்த தந்தையாக இருந்த 13ம் லியோ பாப்பாண்டவரால் கையொப்பமிட்டு வெளியிடப்பட்டது. இந்தத் திருமடல் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாக இன்னும் போற்றப்பட்டு வருகின்றது. ஏனென்றால் திருச்செபமாலையின் புகழைப் பற்றியும், அதன் தார்ப்பரியத்தையும், அதன் மூலம் முழுத் திருச்சபையையும் எவ்வளவு ஐக்கியமாக்குகின்றது என்பதையும் திருத்தந்தை குறிப்பிட்டுக் காட்ட விளைகின்றார். அன்னை மரியா எங்கள் இரட்சணியத்தின் தாயாக இருக்கின்றார். எங்களுக்காக தினமும் தன்னுடைய திருக்குமாரனிடத்திலே பரிந்து பேசி எங்களை இயேசுவின் பக்கமாக கரம்பிடித்து வழிகாட்டுதற்கு தினமும் எங்களை இந்த செபமாலை பக்தி முயற்சியின் மூலமாக அன்போடு அழைத்து நிற்கின்றார். திருச்செபமாலை ஓதுகின்ற போதெல்லாம் நாங்கள் அன்னையோடு சேர்ந்து செபிக்கின்றோம். இவ்வுலகத்திலே திருக்குமாரனைத் தாங்கி அவனைப் பெற்றெடுத்து வளர்த்தெடுத்த அன்னை மரியாவுக்கு எங்களுடைய மனித வாழ்க்கையின் சஞ்சலங்கள், தவிப்புகள், இயலாமைகள் தெரிந்திருக்கின்றபடியினால் அன்னையோடு சேர்ந்து இந்த புனிதமான நிகழ்வாகிய திருச்செபமாலை ஓதுகின்ற நிகழ்வினிலே நாள்தோறும் எங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். திருச்சபையின் செபங்களிலே மிகவும் இதழ்கனிந்த உளம் பூரிக்கும் ஒரு செபக் கொத்து இந்த திருச்செபமாலைத் தியானமாகும்.

> திருச்சபையின் செபங்களிலே மிகவும் இதழ்கனிந்த உளம் பூரிக்கும் ஒரு செபக்கொத்து இந்த திருச்செபமாலைத் தியானமாகும்.

## 2. INEFFABILIS DEUS - ஒப்பற்ற இறைவன்

இந்தத் திருமடலானது அப்பொழுது பரிசுத்த திருத்தந்தையாகவிருந்த 9ம் பீயூ (Pius IX) பாப்பாண்டவரால் க்ன்னிமரியாவின் அமலோற்பவத்தைப் பற்றி எழுதப்பட்டு 1854ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் திகதி கையொப்பமிட்டு வெளியிடப் பட்டது. பரிசுத்த கன்னிமரியா படைப்பின் தொடக்கத்திலிருந்தே சென்மபாவத்தின் ஆளுகைக்குள் உட்படாமல் இறைவனால் பாதுகாக்கப்பட்ட அரும்பெரும் தூயகனியாக இருக்கின்றாள். இதனால் இந்த மேன்மையான அருள்கொடையினால் வானத்துக்கும் வையத்துக்குமுள்ள மற்ற எல்லாப் படைப்புக்களையும்விட மிகவும்

சிறப்புற்று விளங்குகின்றாள். படைப்பின் தொடக்கத்திலே ஏவாள் சாத்தானின் சூழ்ச்சிக்கு உட்பட்டு பாவம் செய்து முழு மனித குலத்தையும் பாவ வழியாக மாற்றினார். பெண்ணினால் இழைக்கப்பட்ட பாவம் இன்னொரு பெண்ணின் மூலமாக அவளைக் கருவியாகக் கொண்டு நீக்கப்படல் வேண்டும் என்பது திருத்தந்தையின் சித்தமாக இருந்தது. இதனால் மனிதரிடத்தில் பிறந்திருந்தாலும், ஆதாமின் வழித்தோன்றலாகவும் இருப்பதால் மீட்கப் பெற வேண்டிய மக்களனைவருள் அவரும் ஒருவராகின்ற போதிலும் அன்னை மரியின் அமலோற்பவம் இறைவனின் முன் குறிப்பட்ட திட்டமும் திருச்சபையின் மறை சத்தியமும் ஆகின்றது என்பதை திருத்தந்தை அவர்கள் எடுத்துக் கூறுகின்றார்.

## 3. SACRA VIRGINITAS - தூய கன்னிமை

இந்தத் திருமடலானது 1942ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் திகதி பத்திமாவில் மரியன்னை காட்சி கொடுத்து 25வது ஆண்டு நிறைவினிலே முழு உலகமும் அன்னை மரியாவின் மாசற்ற திரு இருதயத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சிச் செய்தியை அகிலமெங்கும் பறைசாற்றிட அப்பொழுது பாப்பாண்டவராக இருந்த 12ம் பத்திநாதரால் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்டது. இதிலே திருத்தந்தை அவர்கள் அன்னை மரியா தன்னுடைய வாழ்வினிலே துன்பங்கள், கஸ்ரங்கள், வேதனைகளை தாங்கிக் கொண்டாள். ஆனால், அனைத்தின் பொருட்டும் பாவம் அவளை தன்னுடைய ஆளுகையின் கீழ் வைத்திருக்க முடியவில்லை. அவளது திரு இருதயம் மாசற்ற மகிமை பொருந்திய, இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தணியாத தாகம் கொண்டதாக இருக்கின்றது. இந்த உலகத்தின் மக்களின் துன்பங்களையும் அலகைக்கும், உலகத்திற்கும், உடலிற்கும் அவர்கள் ஆட் கொள்ளப்பட்டு அவர்கள் படுகின்ற துன்பங்களை அன்னை நன்கறிவார்கள். அதனால் இந்த உலகத்தையே அவளது மாசற்ற இருதயத்திற்கு ஒப்படைத்து விடுவது நல்லது. தன் மகனோடு என்றும் நெருக்கமாக இருக்கின்ற அன்னை அவர்கள் எங்களையும் தன்னுடைய மாசற்ற இருதயத்தின் பிரகாசக் கதிர்களினால் சுத்தம் பண்ணுவது உறுதி என்று திருத்தந்தை அவர்கள் அகில உலகத்தின் திருச்சபைக்கு எடுத்துரைப்பு செய்கின்றார்.

தன் மகனோடு என்றும் நெருக்கமாக இருக்கின்ற அன்னை அவர்கள் எங்களையும் தன்னுடைய மாசற்ற இருதயத்தின் பிரகாசக் கதிர்களினால் சுத்தம் பண்ணுவது உறுதி

## 4. MUNIFICENTISSIMUS DEUS - மாட்சிமைமிக்க இறைவன்

அப்பொழுது திருத்தந்தையாகவிருந்த 12ம் பீயூ (Pius XII) அவர்கள் 1950ம் ஆண்டிலே கன்னிமரியாவின் விண்ணேற்பு பற்றிய ஒரு திருமடலை எழுதினார். இவ்வுலகத்திலே இறைவனின் திருமகனாகிய இயேசுநாதர் அவதரிப்பதற்கு, படைப்பின் தொடக்கத்திலிருந்தே இறைவன் கொண்டிருந்த திருச்சித்தம் நிறைவேற்றப்படுவதற்காக, பாவத்தின் தீண்டுதலில் இருந்து காத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணாகிய நசரேத்தூரில் வாழ்ந்த அன்னை மரியா தேர்ந்தெடுக்கப்பட்டார். தூய ஆவியால் இவர் கருத்தாங்கிய திருஉதரம் மாசற்ற ஒளி பொருந்தியது. மரியாவின் வாழ்வு முழுவதுமே இறைசித்தத்திற்கு 'இதோ நான் உமது அடிமை உமது வார்த்தைப்படியே' ஆகட்டும் என்பதாகவே அமைந்திருந்தது. இதனாலேயே அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். தம் மண்ணுலக வாழ்வு நிறைவுற்றதும் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துச்செல்லப் பெற்றார். அனைத்துலக அரசியாக கடவுளால் உயர்த்தப் பெற்றார். ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரானவரும் பாவத்தின்மீதும் சாவின்மீதும் வெற்றி கண்டவருமான தம் மகனுக்கு இன்னும் அதிக நிறைவாக ஒத்தவராகுமாறு இவ்வாறு உயர்த்தப் பெற்றார்.

## 5. AD CAELI REGINAM - விண்ணக அரசி

விண்ணரசி கன்னிமரி என்ற திருமடலானது 1954ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ம் நாள் அப்பொழுது திருத்தந்தையாகவிருந்த 12ம் பீயூ (Pius XII) பாப்பாண்டவரால் எழுதி வெளியிடப்பட்டது. அன்னை மரியா விண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டுள்ளார். இது இறைவனுடைய நீண்டதொரு திருவுளம். அதை அவர் அன்னை மரியாவை இவ்வுலக வாழ்வின் பக்கங்களை அவள் நிறைவு செய்தபின் மண்ணவர்களின் தாயாகவும் புனிதர்கள் கூட்டம் கண்டு பெருமையடைந்து அன்னைக்குக் கிடைத்தது தக்க பேறே என்று போற்றி வாழ்த்தவும் தக்கவிதமாய் தன் அன்னையை மகிமைப்படுத்த விரும்பிய இயேசுக்கிறிஸ்து அன்னை மரியாவை விண்ணரசியாக முடிசூட்டினார். இதைத் திருத்தந்தை அவர்கள் மண்ணக மாந்தர்கள் அனைவரும் தங்களுக்கு அன்னை மூலமாகக் கிடைத்த ஒரு பாக்கியமாகவும், அன்னை மூலமாக நாங்களும் விண்ணகப் பயணத்திற்கு ஏங்கிக்கொண்டு இருக்கின்றோம் என்பதை தினமும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகின்றார்.

## 6. REDEMPTORIS MATER - மீட்பரின் அன்னை

இந்தத் திருமடலானது 1987ம் ஆண்டு அப்பொழுது திருத்தந்தையாகவிருந்த இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் அன்னை மரியா பற்றிய திருமடலாக வரையப்பட்டது. இதில் திருத்தந்தை அவர்கள் அன்னை மரியா மீட்பின் தாய் என்றும் அவள் தொடக்கத்தில் இருந்தே சகல மனித மீட்பிற்காகவும் எவ்வாறாக ஒத்துழைத்தார் என்பதையும் அதனாலேயே உலக இரட்சகரும் மீட்பருமான இயேசு வின் தாயாகவும் அவள் முன்குறித்து வைக்கப்பட்டாள் என்றும் குறிப்பிடுகின்றார். சகல மனிதர்களும் ஈடேற்றம் பெற வேண்டும். எல்லோரும் பாவ வாழ்வில் இருந்து மீட்படைய வேண்டும். இதுவே அன்னையின் விருப்பமாகவும், இதற்காகவே அன்னை மரியா தன்னுடைய பரிந்து பேசுகின்ற அலுவலைச் செய்து வருகின்றாள் என்று குறிப்பிடப்படுகின்றது. இதில் திருத்தந்தை அன்னை மரியாளை உலக இரட்சணியத்தின் தாய் என்றும் மீட்கப் பெற வேண்டியவர்களுக்கு வழிகாட்டி என்றும் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றார்.

> சகல மனிதர்களும் ஈடேற்றம் பெற வேண்டும். எல்லோரும் பாவ வாழ்வில் இருந்து மீட்படைய வேண்டும். இதுவே அன்னையின் விருப்பமாகும்,

## 7. இரண்டாம் வத்திக்கான் சங்கம் - திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கத்திலே இயல் 8 இலே "கிறிஸ்து வினுடையதும் திருச்சபையினுடையவும் மறைபொருளில் இறை அன்னை தூய கன்னி மரியா"

இறைவன் அளவில்லாக் கருணையும் ஞானமும் உள்ள கடவுள். அவர் உலகை மீட்க ஆவல் கொண்டு 'காலம் நிறைவேறியபோது........ நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்' (கலாத்தியர் 4:4-5). இதனால்தான் திருச்சபையின் தலைவராகிய கிறிஸ்துவோடும் அவருடைய தூயவர் அனைவரோடும் ஒன்றித்து நம் கடவுளும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் தாயும், என்றும் கன்னியுமான மாட்சிமிக்க மரியாவுக்கு நம்பிக்கை கொண்டோர்கள் அனைவரும் முதற்கண் வணக்கம் செலுத்த வேண்டும். மேலும் கத்தோலிக்க திருச்சபை, அன்னை மரியா தன்னுடைய

> கடவுளும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் தாயும், என்றும் கன்னியுமான மாட்சிமிக்க மரியாவுக்கு நம்பிக்கை கொண்டோர்கள் அனைவரும் முதற்கண் வணக்கம் செலுத்த வேண்டும்.

வாழ்நாட்கள் முழுவதும் இறைவனின் வார்த்தையை உடலிலும் உள்ளத்திலும் ஏற்று வாழ்ந்தபடியால், தூய ஆவியால் கற்பிக்கப் பெற்று பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் பற்றோடும் அவளை அன்பு மிகுந்த தாயாக ஏற்றுக் கொள்கின்றது.

அன்னை மரியா கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய், சிறப்பாக நம்பிக்கை கொண்டோரின் தாய். பழைய ஏற்பாட்டிலே முதற் பெற்றோர் பாவம் செய்தபோது அவர்களுக்கு அலகையின் மேல் பெறப்போகும் வெற்றியைப் பற்றி எடுத்துரைக்கப் பட்டது. அதற்கு மூலகாரணமாக இருந்த பெண்ணாக மரியா தோற்றம் பெறுகின்றார். ஒரு பெண்ணால் சாவு வந்ததுபோல் மற்றொரு பெண்ணால் வாழ்வும் வரவேண்டும் என்பதே இறைதந்தையின் சித்தமாக அமைகின்றது. இதனால்தான் திருத்தந்தையர்கள் மரியா கடவுள் கையில் செயலற்ற ஒரு கருவியல்ல; மாறாக, நம்பிக்கையாலும் கீழ்ப்படிதலாலும் மனித இனத்தின் நிறைவாழ்வுக்கு தன்னுரிமையுடன் ஒத்துழைத்தார்" என்று போற்று கின்றனர். மரியா தன் கீழ்ப்படிதலால் தானும் மனித இனம் அனைத்தும் நிறைவாழ்வு பெறக் காரண மானார்.

> அன்னை மரியா கிறிஸ்துவின் தாய், மக்களின் தாய், சிறப்பாக நம்பிக்கை கொண்டோரின் தாய்.

இயேசுவின் குழந்தைப் பருவத்திலும், அவரது பொது வாழ்விலும் அவரது பகிரங்கப் பணியின் போதும் அன்னையின் பங்களிப்பு நிறைவாகக் காணப்பட்டது. மேலும் கிறிஸ்துவால் வாக்களிக்கப் பெற்ற தூய ஆவியார் வரும்வரை அன்னை மரியா அப்போஸ்தலர்களோடு தங்கியிருந்து ஆவியானவரின் வருகைக்காக செபித்துக் கொண்டு இருந்தார்.

# மரியாளும் பெண் விடுதலையும் அடையாளங்களின் தேடல்

அருட்தந்தை சா.பி. கிருபானந்தன்

தாய் உருவம் எல்லா மதங்களிலும் தனியிடம் வகிக்கின்றது. தமிழ்ப் பண்பாட்டு உலகில் ஐபீரிய கிறிஸ்தவ பின்புலத்தில் தழுவப்பட்ட மாற்றுச் சீர்திருத்த தன்மையான கிறிஸ்தவ விசுவாசம் ஊடுருவிய பொழுது மரியா வணக்கம் உள்வாங்கப்பட்டது. ஐபீரிய மக்களிடையில் வலுமிக்க பக்தி அடையாளமான மரியா பக்தி எமது பண்பாட்டு பின்புலத்தில் இருந்த கண்ணகி வணக்கத்திற்கு மாற்றீடாக உருவானது என்ற கருத்து உள்ளதையும் கூறலாம். இயேசுவின் திருத்தூதுவரான தூய தோமா இந்தியாவுக்கு வந்தபோது ஆரோகண அன்னை பெயரில் ஏழூரைப் பள்ளிகள் அமைத்ததான நிகழ்வைச் சுட்டிக்காட்டுவர். இயேசு சபை மறைப்பணியாளரான வீரமாமுனிவர் என்ற தைரியநாத சுவாமிகள் தமிழ் நாட்டில் கோணன்குப்பம் என்ற இடத்தில் மாதா ஆலயத்தைக் கட்டியபோது தமிழ் பெண்போல் உருவகப்படுத்தி சேலை உடுத்தி பெரிய நாயகி எனப் பெயரிட்டது, விசுவாச அடையாளங்களின் பண்பாட்டுமயமாக்கலுக்கு அன்னை மரியா பக்தி சிறந்த ஊடகமாக அமைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. மரியா பக்தி உடல் நோய்கள், வாதைகளிலிருந்து குணமடைதல், பரிந்துரை மன்றாட்டு பின்புலத்தில் சிறப்பிடம் பெற்றது. பாம்புக் கடிக்கு மடுவுக்கு எடுத்துசெல்லல், மடு மண், ஆரோக்கிய மாதா, சில்லாலை மருந்து, மாதா பாதம் கழுவி குடித்தல், போன்ற பூர்வீக பற்றுறுதிகளின் வெகுஜன வடிவங்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

மரியா பக்தி
உடல் நோய்கள்
வாதைகளிலிருந்து
குணமடைதல், பரிந்துரை
மன்றாட்டு பின்புலத்தில்
சிறப்பிடம் பெற்றது.

## பெண்நிலைசார் மீள் வாசிப்புகள்

இன்று பேசப்படும் பின்நவீனத்துவம் நவீனத்துவத்தின் கட்டவிழ்ப்பாகவே பார்க்கப்படுகிறது. ஆண்வர்க்க மேலாதிக்க கருத்தியல்களினால் கட்டப்பெற்ற பல கருத்துப் பாடங்களின் பெண்ணிலைவாத வாசிப்பு இன்று மிதப்புப்பெறுவதை அவதானிக்கலாம். குறிப்பாக, உளவியல் துறையில் பிரட்யாட் முன்வைத்த பல கருத்துக்கள் பெண்ணிலைவாதிகளில் பலத்த எதிர்வினையை உருவாக்கியபோதும் இன்று இக்கருத்துகள் பல பெண் உளவியலாளர்களால் நிராகரிக்கப்படுவதைக் காணலாம். ஆண்சார் பாலியல் கொள்கைவாதிகள் குறிப்பாக உளவியலாளர்கள் எதிர்மறையாகவே, நிறைவுறாத பாலியல் உள்ளதாக பெண்களை சித்தரிக்க முடியும். நவீனத்துவத்தில் பெண்மை ஆண்சார் ஒன்றாகவே கருதப்பட்டது. பெண்நிலைசார் மீள் வாசிப்புகள் சிறப்பாக விஞ்ஞானம், மற்றும் சமயப் பனுவல்களில் பெண்மைபற்றிய தவறான சிந்தனையோடு கட்டப்பட்டதை இன்று கட்டவிழ்க்கின்றனர். அடையாளம் விடுவிக்கப்பட்ட நிலையில் பாலியல் சாராத மொழிப்பிரயோகம் வலியுறுத்தப்படுகிறது.

ஆண்மைய, பெண்ணெதிர்தன்மை கொண்டுள்ளதும் பாடங்களுக்கிடையில் பல வேறுபாடுகளும் உள்ள விவிலியத்தை தூக்கி எறியாது ஆசியப் பெண்கள் விவிலிய ஆய்வுமுறையிலும் பொருள் கோளியலிலும் புதிய அறிதிறனை சீர்தூக்கிப் பார்ப்பதில் ஈடுபட்டுள்ளனர் என பவுலின் செக்காலாக குறிப்பிடுகிறார்.[1]

## மரியா பற்றிய வணக்கம்

கடந்த காலங்களில் நீதி தேவதை, சமாதான தேவதை, ஞானம், கல்வி சரஸ்வதி, செல்வம் இலட்சுமி என பெண்கள் உயர்த்தப்பட்ட அடையாளங்களை பெற்றபோதிலும் பெண்ணாசை வன்புணர்வு, காமப் பேய், பின்புத்தி போன்ற ஆண்நிலைவாத கருத்தியல்கள் மிதப்புபெற்றுள் ளதையும் அவதானிக்கலாம். ஆண்நிலை சார் கருத்துக்கள் விவிலியத்திலோ, இறையியலிலோ

கடந்த காலங்களில் நீதி தேவதை, சமாதான தேவதை, ஞானம், கல்வி சரஸ்வதி, செல்வம் இலட்சுமி என பெண்கள் உயர்த்தப்பட்ட அடையாளங்களை பெற்றபோதிலும் பெண்ணாசை வன்புணர்வு, காமப் பேய், பின்புத்தி போன்ற ஆண்நிலைவாத கருத்தியல்கள் மிதப்புபெற்றுள்ளதையும் அவதானிக்கலாம்.

---

1 Pauline Chakkalaka, Reading the Bible from a Feminist Perspective in Jnanandepa Vol. 2. No. 1 109 - 125 , p.113

மிதப்புப் பெறுவதையும் அவதானிக்கலாம். விவிலிய ஆய்விலும் சரி, குறிப்பாக இறையியல்துறையில் பெண்நிலை வாசிப்பு சிறப்பிடத்தைப் பெறுகின்றது.

மரியா பற்றிய உருவகம், மாதிரி உரு, அடையாளம் அதன் தொடர்பில் உருவான வெகுஜன பக்தி வடிவங்கள் காலத்திற்கு காலம் மாற்றமுறுகின்றது. ஆனால், விவிலிய மரியா காலத்தின் தேவைக்கேற்ப மிதப்புபெற்றுள்ள பல புதிய தலைப்புகளை உள்வாங்கியுள்ளதை அவதானிக்கலாம். அமெரிக்க ஆயர் பேரவை மரியாவை விடுதலையடைந்த பெண் மாதிரி என முன்வைத்தனர். இன்று மரியியல் இரண்டாம் வத்திக்கான் பின்புலத்தில் புதிய மாற்றத்தை பெற்றுள்ளது. இன்று மரியியல் விவிலிய, வழிபாட்டியல், கிறிஸ்வ ஒன்றிப்பு, மானிடவியல் பரிமாணத்தில் பார்க்கப்படல் வேண்டும் என்ற கருத்தை திருத்தந்தை 6வது பாவிலு "Marialis Cultus" என்ற திருத்தூது மடலில் முன்வைத்தார்.[2]

## மரியா ஒரு சீடத்தி

திருச்சபை வரலாற்றில் காலத்திற்கு காலம் இறையியல் சிந்தனைக்கேற்ப மரியா பற்றிய அடையாளம் மாறிவந்துள்ளதைக் காணலாம். எப்படியாயினும் மரியாவினது சீடத்துவம், என்றும் மாறாத அம்சமாக திருச்சபையில் பேணப்பட்டது. மரியாபற்றி விவிலியத்தில் ஒரு சில குறிப்புகளே உள்ளன. நற்செய்தியாளர்கள் மத்தேயுவும், லூக்காவும் தரும் குழந்தைப் பருவப் பாடத்தில் மட்டுமே மரியா பற்றி காணக் கிடக்கிறது. புதிய ஏற்பாட்டில் தூய பாவிலு மரியாவின் பெயரைக்கூட குறிப்பிடவில்லை. மாற்கு நற்செய்தியிலும் தூய யோவானின் நற்செய்தியிலும் முரண் தெறிப்பை அவதானிக்கலாம்.

தூய யோவானின் இறையியல் சிந்தனையில் மரியா சிலுவையடியில் துயரத்தை தாங்குபவளாகவும், திருச்சபையின் அன்னையாகவும் காட்டுகிறார்.

தாவீது வாக்குத்தத்தத்தின் பேழையை கொண்டுவந்தபோது நடனமாடிய இடமான ஆன்கரிமில் மரியா எலிசபேத் சந்திப்பு இடம் பெற்றதாக தூய லூக்கா

[2] Paul VI, Marialis Cultus" Apostolic Exhortation. 1974

சுட்டிக்காட்டுவதும், சாமுவேலின் தாய் அன்னாவின் பாடலை ஒத்ததான மரியாவின் புகழ்ச்சிப் பாடலைத் தருவதும் போன்றவை, தொடக்க காலத் திருச்சபையில் மரியா பற்றிய விவிலிய காலப் படிமம் வலுமிக்க ஒன்றாகும் என்பதற்குச் சான்றாகும். மரியாவின் இப்புகழ்ச்சிப் பாடல் திருச்சபையின் வரலாறு முழுவதும் பலத்த எதிர்வினையை உருவாக்கிய பாடலாகும். தூய யோவானின் இறையியல் சிந்தனையில் மரியா சிலுவையடியில் துயரத்தை தாங்குபவளாகவும், திருச்சபையின் அன்னையாகவும் காட்டப்படுகிறார். தூய லூக்காவின் இரண்டாவது பகுதியான திருத்தூதர் பணி தொடக்கத்தில் மரியா திருச்சபையோடு ஒன்றுபட்டுள்ளதைக் காட்டுகிறது. தொடக்ககால திருச்சபையில் மரியாவை பற்றிய கருத்தமைவு யாக்கோபுவின் முன்னைய நற்செய்தியாக்கம் "Proto evengelium of James" என்ற திருமறைப் புறநூல் பாரிய எதிர்வினையை உருவாக்கியுள்ளது. கிறிஸ்தவ பூர்வீகத்தில் மரியாவின் அடையாளம், என்றும் வலுமிக்க சக்தியாகும், என்றும் மாற்றமுறாத சீடத்தி என்ற அம்சத்துக்கே, வரலாறு முழுவதும் திருச்சபை அவளிடம் மாறாமற் போகிறது என பெண் இறையியலாளர் கத்லீன் கொயல்[3] தெரிவித்துள்ளார்.

> கன்னிமைக்கு முன்மாதிரியாக திருச்சபையில் குறிப்பாக துறவற மடங்களில் உருவகிக்கப்பட்ட வடிவம்தான் அன்னை மரியா முன்மாதிரியான கன்னி என்பதாகும்.

## முன் மாதிரியான கன்னி

மறை சாட்சிகளாக மரிக்கும் காலகட்டம் பேரரசர் கொன்சன்ரைனின் காலத்தில் மறையத் தொடங்கிய பின், துறவறம் திருச்சபையில் தளைக்கத் தொடங்கின காலக்கட்டத்தில் எகிப்திய பாலைநிலங்களுக்கு படையெடுத்த ஆண் பெண் ஒருவந்தியர்களுக்கு விவிலிய மரியா உதாரணமிக்க ஒருவந்தி என்ற அடையாளத்துக்கு மாற்றப்பட்டாள் என்பதற்கான பல பனுவல்களை பார்க்கலாம். துறவறம் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டபோது "என்றும் கன்னி" என்ற அடையாளம் உருவகப்படுத்தப்பட்டதோடு துறவிகளுக்கு வலுமிக்க அடையாளமாக திருச்சபையில் உருவானது. 5வது நூற்றாண்டுகளில் துறவற வாக்குத்தத்தம் வடிவம் பெறத்

---

[3] Kathleen Coyle, Theology Today: Reinterpreting the Symbols, in East Asian Pastoral Review.

தொடங்கிய காலத்தில் கடவுளுக்கு முதன்முதலில் வாக்குக்கொடுத்தவள் மரியா. எனவே கன்னிமைக்கு முன்மாதிரியாக திருச்சபையில் குறிப்பாக துறவற மடங்களில் உருவகிக்கப்பட்ட வடிவம்தான் அன்னை மரியா முன்மாதிரியான கன்னி என்பதாகும்.[4]

## தியோட்டகோஸ் - கடவுளை தாங்கியவள்

கிறிஸ்தவ விசுவாசம் எடுத்துச் செல்லப்பட்ட புவியியல் வரையறைகளின் பண்பாட்டு, இறையியல் மொழிக்கும் சூழலுக்கும் அமைய மரியியலும் புதுப்புது அடையாளங்களைப் பெற்றது. திருச்சபைத் தந்தையர்கள் மரியாவை தியோட்டகோஸ் என்ற தலைப்பில் குறிப்படத் தொடங்கினார்கள். ஓரிஜின் இத்தலைப்புப் பெயரை முதன்முதலாக எடுத்தாண்டார். கி.பி 4வது நூற்றாண்டில் எபேசு பொதுச் சங்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும், கிறிஸ்துவுக்கு முன் கிட்டத்தட்ட 5ம் நூற்றாண்டிலிருந்து தாய் வணக்கம் கிரேக்க சூழலில் இருந்துள்ளது. கிறிஸ்து பான்ரேக்கர் என்ற அருளோவியம் (Icon) கிரேக்க பண்பாட்டுச் சூழலில் உருவாகியபோதும், மரியா அனைத்துலக அரசியாக இறைமக்களால் பார்க்கப்படும் அருளோவியம் தோன்றியுள்ளதை அவதானிக்கலாம்.

தியோட்டகோஸ் என்ற மரியாவின் கிரேக்க தலைப்புப் பெயரே பைசாந்திய திருச்சபையின் ஆன்மீகத்தில் மிகவும் முக்கிய பங்கு வகித்ததோடு தனித்துவமான மத அடையாளமாகவும் அமைந்தது. துன்புறும் மனித குலத்திற்காக பரிந்துபேசும் தன்மையோடு கொன்சாந்திநோபிள் நகரத்தின் பாதுகாவலி என்ற பற்றுதியும் வலுப்பெற்றது. மங்கள வார்த்தை திருநாளில் அதாவது மார்ச் 25ம் நாள் நன்றிப் பாடலாக பாடப்படும் அகத்திஸ்தோஸ் என்ற பாடல் உருவானது. இப்பாடலில் முதல் 12 வரிகளும் குழந்தைப்பருவ நற்செய்தியைப் பின்புலமாகக் கொண்டது. இதில் ஒரு வரி போலி மத்தேயுவின் திருமுகத்தை (Apocrypha of Pseudo-Mathew) ஒத்ததாகக் காணக்கிடக்கிறது.

கிறிஸ்துவின் உலகத்
தாயான மரியா
மானிடத்தின்
ஆன்மீகத்தாய்
என்ற புதிய ஏவாள்
என்னும் அடையாளம்
(தொட. 3: 30)
விவிலியப் பின்புலத்தில்
திருச்சபைத்
தந்தையர்கள் காலத்திலே
உருவானது.

---

[4] Ibid, p.134

அன்னை மரியாவை துணை வேண்டி மன்றாடும் முறை இருந்துள்ளதான குறிப்புகள் உள்ளது. கிபி. 3வது அல்லது 4ஆவது நூற்றாண்டுக்குரியதான பைபரஸ் சுவடியில் இம்மன்றாட்டின் இறுதி சில வசனங்கள் கிடைத்துள்ளதாக அறிஞர்கள் குறிப்பிடுவர்.[5] மரியா அனைத்துலக அரசியாக பரிந்துரைப்பவளாக கிரேக்க பண்பாட்டு சூழலில் மாற்றமுறுகிறது.

## மரியா - புதிய ஏவாள்

கிறிஸ்துவின் உலகத் தாயான மரியா மானிடத்தின் ஆன்மீகத்தாய் என்ற புதிய ஏவாள் என்னும் அடையாளம் (தொட. 3:30) விவிலியப் பின்புலத்தில் திருச்சபைத் தந்தையர்கள் காலத்திலே உருவானது. கிறிஸ்துவின் தலைப்புப் பெயராக புதிய ஆதாம் (உரோ. 5:14, 1கொரி. 15:22) என்ற விவிலியப் பின்னணியில் மரியா இறை திட்டத்திற்கு வெளிப்படுத்தின பற்றுதியினால் மிகவலுமிக்கதான திருச்சபைத் தந்தையரின் ஆணாதிக்க சிந்தனையில் உருவான இக்கருத்தியல் திருச்சபையில் பொது பிரசங்க மரபிலும் மன்றாட்டு முறையிலும் பாரிய எதிர்வினையை உருவாக்கியது. ஏவாளுக்கும் அவளோடு தோழமையான மற்றைய பெண்களுக்கும் மானிடத்தின் பாவ நிலையின் பொறுப்புப் பற்றிய தெறிப்பு பாவம், அருள் பற்றிய ஆண் பெண் என்ற இருவரின் முழுமானிடத்தையும் இது மையப்படுத்தவில்லை.[6] மரியா பாம்பின் தலையை மிதிக்கின்ற படிமம் கலை வடிவமான சுருபங்களிலும் பாடல்களிலும் வலுமிக்க அடையாளமாக வளர்ந்துள்ளது. இன்றும் கூட ஏவையின் மக்களாக.... என்ற மன்றாட்டு பிரபலமிக்க மன்றாட்டு அடையாளமாகும்.

> எளிமையான பலஸ்தீனிய குடும்பப் பெண்ணான மரியாவுக்கு தமது வணக்கத்துக்காக "எனது அரசி" (My Lady) என்ற அடையாளம் கொடுக்கப்பட்டது.

## எனது அரசி My Lady

பிராங் - யேர்மனிய பேரரசர் சார்லிமெயின் காலத்தில் அரச முடியும் சிலுவையும் (Crown & Cross) பொருத்தப்பாட்டை அரசியலில் கண்டபோது

[5] Archbishop Dominic Jala, Mary in The Liturgy, in World & Worship, March - April 2006, Vol. 29, N0.9, 80 - 106, p.82.

[6] Coyle, Op cit p. 139

தனது ஐரோப்பிய பேரரசுத் திட்டத்துக்கு கிறிஸ்தவத்தை கருவியாக்கினார். புதிய பண்பாட்டுச் சூழல்கள் பேரரசோடு இணைக்கப்பட்டபோது மரியாபற்றிய அடையாளமும் மாறியது. உள்வாங்கப்பட்ட பல யேர்மனிய இனக்குழுக்களின் பண்பாட்டு பின்புலத்தில் கிறிஸ்தவ சடங்குமுறைகளில் பாரிய எதிர்வினையை உள்வாங்கின. வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் பாரியளவிலான வெளி ஆசாராச் சடங்காக மாற்றப்பட்டன. எளிமையான பலஸ்தீனிய குடும்பப் பெண்ணான மரியாவுக்கு தமது வணக்கத்துக்காக "எனது அரசி" (My Lady) என்ற அடையாளம் கொடுக்கப்பட்டது. பழைய வழிபாட்டு கலண்டரிலும் மரியா பற்றிய திருப்பலிகள் முக்கிய இடத்தைப் பெற்றன. மத்திய காலத்தின் தொடக்க கூற்றில் அரசியும் பைசாந்திய அடையாளமான பரலோக பூலோகத் தலைவியும் என்ற அடையாளம் வலுப்பெற்றது. திருச்சபையின் இலட்சியப் பார்வைக்கேற்ப மரியாவின் கீழைத்தேச அருளோவியத்தின் சௌந்தர்யமும், அன்பு தாய் தனது தூய்மை பிள்ளையும் என்ற உறவினை வெளிப்படுத்தும் புது யேர்மானிய வடிவமான தனது குழந்தையுடன் விளையாடும் வடிவமும் இணைந்து கொண்டது என கில்டா கிறிவ் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்துவின் மணவாட்டி

12ம் 13ம் நூற்றாண்டுகளில் மரியாபற்றிய சடங்காசரம் மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது. தூய பேணாட் கலிவரக்ஸ் விவிலியத்தில் காணப்படும் இனிமைமிகு பாடலின் பாட்டுடைத் தலைவியாக அன்னை மரியாவை உருவகப்படுத்தும் கருத்தை முன்வைத்தார். என்றும் கன்னி என்ற அடையாளத்தோடு கிறிஸ்துவின் மணவாட்டி என்ற அடையாளம் இணைந்தது. ஏற்கனவே புதிய ஆதாம், புதிய ஏவாள் என்ற திருச்சபைத் தந்தையர்களின் திருமணப் பந்த உறவு பிற்காலத்தில் அது தோற்றம் பெற்றது.

## மரியா விண்ணக அரசி

பேராலயங்கள் அன்னை மரியா பேரில் எழத்தொடங்கின. இரட்சணியத்துக்காக மன்றாடும் முறை வளர்ச்சிபெற்றது. மத்திய காலத்தில் திருச்சபையில் குருக்கள், ஆயர்கள் மடத்துறவிகள் என்ற இலத்தீன் கல்வியறிவு பெற்ற உயர்குழாம் தோன்றியபோதிலும் கல்வியறிவு இல்லாத பாமர மக்கள் மத்தியில் மரியாவை சுற்றி பல சடங்குகள் கொண்டாட்டங்கள் தோன்றத் தொடங்கின. வழிபாடு இலத்தீன்மயமானதால் பொதுநிலையினரின் பங்கேற்பு அருகியே இருந்தது. திருப்பலி நேரத்தில் செபமாலை சொல்லுதல், மற்றும் யாத்திரை போதல் போன்ற மரியா பற்றிய இதிகாசங்களோடு தொடர்புபட்டதாக தோன்றத் தொடங்கின.

Happy Birthday Happy Birthday Happy Birthday

மாற்றுச் சீர்திருத்த காலத்தில் மரியாவின் திருக்காட்சியும் செப தப அழைப்பும் திருச்சபை மரியியலில் புது பரிமாணத்தை உருவாக்கியது.

## நானே அமலோற்பவம்

திருச்சபையில் தோன்றிய சடப்பொருள் வாதப் போக்கும் இக்காலக்கட்டத்தில் உருவான சீர்திருத்த வாதிகளின் எதிர்ப்பும் மரியியலில் குறிப்பாக வெகுஜன மரியாள் பக்தியை கேள்விக்குள்ளாக்கியது. பல பக்தி முயற்சிகள் கண்டிக்கப்பட்டது. அச்சுமுறை கண்டு பிடிப்புடன் வெகுஜனக் கல்வி வளர்ந்தது. விவிலிய வாசிப்பு சுய மொழியில் வற்புறுத்தப்பட்டது. இதனால் உருவான எதிர்ப்புக்கு பதிலாக மாற்று சீர்திருத்த கருத்து வலியுறுத்தப்பட்டது. மரியாவின் ஆளுமை, பரிந்துரை, மற்றும் பல ஐதீக கதைகள் விமர்சனத்துக்குள்ளாயின. இயேசுவிடம் செபிப்பதா படைப்பொருளான மரியாவிடம் செபிப்பதா என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. விவிலியமா பராம்பரியமா என்ற விவாதம் முன்னெடுக்கப்பட்டது.

மாற்றுச் சீர்திருத்த காலத்தில் மரியாவின் திருக்காட்சியும் செப தப அழைப்பும் திருச்சபை மரியியலில் புது பரிமாணத்தை உருவாக்கியது. "உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்ற விவிலிய வாக்கு மாற்றுச் சீர்திருத்த காலத்தில் வலியுறுத்தப்பட்ட கீழ்ப்படிவுள்ள நசரேத்து பெண்ணாக மரியா திருவுரைகளில் வார்க்கப்பட்டு இறைமக்கள் முன் வைக்கப்பட்டதை அவதானிக்கலாம்.

## அன்னையும் பட்டாளியும்

இரண்டாம் வத்திக்கான் இறையியல் பின்புலத்தில் குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மற்றும் மற்றைய மூன்றாம் உலக நாடுகளிலும் எழுச்சி பெற்ற விடுதலை இறையியலும், மற்றும் சூழமைவு இறையியலும், மரியாபற்றிய பார்வையை ஏழைப் பெண்ணாகவே பார்த்தனர். இதனால் நசரேத்து இளம் பெண் துணிவுடன் சிலுவை அடியில் நின்ற தாய் வரலாற்று சூழமைவுக்கேற்ப வலுவுள்ள அடையாள மாதிரியாக அமைந்தது. தென்அமெரிக்க கண்டத்தின் நிக்கருக்வா நாட்டில் உருவான இராணுவப் புரட்சியின்போது செலஸ்ரமோ தீவில் இருந்த இரப்பிஸ்ற் மடம், முக்கிய பாத்திரம் வகித்தது. அவ் மட ஆலயத்தில் காணப்பட்ட அன்னை மரியா சுருபத்தின் கீழ் அன்னையும் பட்டாளியும் என குறிப்புக் காணப் பட்டது.[7] அதேபோல இராணுவ ஆட்சியின்போது பராக்குவெ நாட்டு வானொலியில்

---

7 Owen Chadwick, A History of Christianity, Phoenix Illustrated, Cambridge, p.206

மரியாவின் பாடல் புரட்சிகரமானது என்று கருதியதால் அப்பாடல் ஒலிபரப்பு செய்யப்படுவதைத் தடுத்தது. இராணுவ கொடுமையால் தங்கள் பிள்ளைகள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டபோது அன்னையரின் எழுச்சி சிலுவை யடியில் நின்ற மரியாபோல் துணிவுள்ளதாகப் பார்க்கப்பட்டது. இறந்த மகனின் உடலை மடியில் இருத்திய அன்னை மரியா மாதிரி அடையாளம் வலுமிக்கதாக அமைந்தது.

## திருக்குடும்பத்தில் மரியா

இன்றைய பண்பாட்டை முன்னாள் திருத்தந்தை சாவின் பண்பாடு என குறிப்பிட்டார். கருச்சிதைவு, குடும்பச் சிதைவுகள், பெண்மை பாலியில் பொருட்களாக தொடர்பு ஊடகங்களில் சித்தரிப்பும், எயிட்ஸ் (AIDS) நோயினால் பெண்களும் குறிப்பாக குழந்தைகளும் அவலத்திற்கு உட்படும் நிலை, வன்புணர்வு எதார்த்தப்பட்ட நிலையில் அன்னை மரியா திருக்குடும்பத்தில் தாயாக அடையாளப்படுத்தப்படுகின்றாள்.

## பெண்ணியமும் விடுதலை இறையியலும்.

ஆரம்பகாலத்தில் விடுதலை இறையியல் பெண்நிலைவாதக் கண்ணோட்டத்தில் சில விமர்சிப்புகள் முன்வைக்கப்பட்டன. தென் அமெரிக்க ஆணாதிக்க சார்பான இறையியல் சிந்தனையென பல பெண் இறையியலாளர்கள் தமது கருத்தை முன்வைத்தனர். பல கத்தோலிக்கத் திருச்சபையின் வலுமிக்க பாரம்பரியங்கள் சுதேச மக்களின் வெகுஜன பண்பாடுகளை வலுக்கட்டாயமாக தடைசெய்ததை பல சுதேசிய இறையிலாளர்கள் விமர்சித்தனர். இதனால் விடுதலை இறையியலின் மையக்கருத்தான ஏழைகளின் விடுதலை என்ற கருத்தியலில் ஏழைகள், வலுவாக்கம் என்ற கருத்துத்தளம் விரிவாக்கப்பட்ட பெண்கள் விடுதலை, சுதேசிய மக்களின் எழுச்சி, சூழல் பாதுகாப்பு, போன்றவை உள்ளடக்கம் பெற்றது.[8]

## பெண்ணிநிலைவாத எழுச்சி

19வது நூற்றாண்டு பெண்கள் ஒடுக்கு முறையின் காலமாக அமைந்தபோதிலும் பெண் கல்வி, பெண்கள் வாக்குரிமை போன்ற விழிப்புணர்வுகள் தோன்றத்தொடங்கின. 1960களில் ஐக்கிய அமெரிக்காவில் முதலாளித்துவ சமூகத்தில் இதன் தோற்றுவாய் இருந்தபோதிலும் பெண்ணிநிலைவாதம் ஆண் அடையாள மறுப்பு என்ற உளவியல் பின்புல நிலையில் கிளர்ந்த பெண்ணியம் தீவிரபோக்குத்

---

[8] Ian Linden, Liberatio Theology Coming of age? CIR, London, 2000, p.35

தன்மையான (Radical) பெண்ணியமாகவே வர்ணிக்கப்பட்டது. முதலாளித்துவ பொருளாதார கட்டமைப்பில் உருவாகிய பெண்ணிநிலை வாதம் உயர்குழாமியப் பண்பு உடையதாகவே இருந்தது. இதனால் காலனித்துவ நாடுகளில் பெண் நிலைவாதம் பாரிய எதிர்வினையை உருவாக்கவில்லை.

போல்சிவிக் புரட்சியை தொடர்ந்து பெண் விடுதலை எழுச்சி பெறத் தொடங்கியது. பெண்ணிநிலைவாதம் முதலாளித்துவ, சோஷலிச, தீவிர அம்சங்களுக்கு மாற்றீடாக சோஷலிச பொருளாதார கட்டமைப்பில் உள்ள நாடுகள் சோஷலிச பெண்ணியத்தை முன்வைத்தனர். காலனித்துவ எதிர் போராட்ட காலங்களில் இதன் தாக்கம் மூன்றாம் உலக நாடுகளில் உள்வாங்கப்பட்டது.

## ஆண்மாரியாக்கம் கிளர்ச்சிவாத பெண் நிலைவாதிகளும்

தாய்மை, பெண்மையின் எதார்த்தமே. இன்று பல பெண் இயக்கங்கள் குறிப்பாக பெண்னோயியல் மருத்துவத்துறை வளர்சிகண்ட ஐக்கிய அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஒருபால் உறவு, குடும்ப, பிள்ளைகள் பொறுப்பற்ற பாலியல், ஒரு குழந்தை தாய்மை, சட்டபூர்வ கருச்சிதைவு, விவாகரத்து, சுதந்திர விவாகம் போன்ற பெண் நிலைவாதப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதையும் காணலாம். ஊடகத்துறை களில், குறிப்பாக விளம்பரசார் வர்த்தகத்தில் பெண்கள் ஆண்மாரிகளாக சித்தரிக்கப்படுவதும் உண்டு. தற்போதைய திருத்தந்தை 16 பெனடிற்று முன்பு கருதினால் இரட்சிங்கராக வெளியிட்ட மெய்யின் உழைப்பாளிகள் என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். பாலியல் வேறுபாடு இரண்டாவது பட்சமாக எதார்த்தம் என கருதும்போது ஆன்மாவின் மனுவுட லேற்பை பாலியல் இருப்பு என்பதே உடலின் திரிபுவாதமாகும் என்கிறது. இருப்பினும் ஆண் அஃவள் இன்றி குழந்தையை பெற்றெடுக்க முடியாதுபோல பெண் பிரதிபலிப்பின்றி ஆண் கன்னிமை அடையமுடியாது. இதன் அடிப்படையில் பெண் மானிடத்தின் மற்றைய அரைப் பகுதியினருக்கு அடையாளமும் உதாரணமுமாய் இருக்கிறாள். [9]

ஆண் அவள் இன்றி குழந்தையை பெற்றெடுக்க முடியாதுபோல பெண் பிரதிபலிப்பின்றி ஆண் கன்னிமை அடையமுடியாது. இதன் அடிப்படையில் பெண் மானிடத்தின் மற்றைய அரைப் பகுதியினருக்கு அடையாளமும் உதாரணமுமாய் இருக்கிறாள்.

[9] Cardinal Joseph Ratzinger, Co-Workers of the Truth, Ignatius Press, San Francisco, p. 265 - 266

## மரியா பற்றி அடையாளங்கள் மறுவாசிப்பு வேண்டும்.

சொற்களின் அர்த்ததை அவற்றின் செயற்பாட்டுத் தளமே நிர்மாணிக்கும் என்ற ஆஸ்திரி மெய்யிலாளர் விற்றஸகைனின் கருத்து மொழியின் ஆய்வை விரிவாக்கியது. மொழி வழி உலகம் என்ற மொழியிலாளரின் சிந்தனைக்கேற்ப அமைப்பியல் வாதத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தது. அதனால், பேச்சு மொழி, எழுத்து மொழி என்ற வேறுபடுத்தல் அடையாளவியலில் காணலாம். எழுத்துக்கள் அனைத்துக்கும் குறியே. ஆழ் மனத்தில் உள்ளவை மொழி மூலமே வெளிப்படுகிறது. இதன் பின்புலத்தில் வரலாற்று காலங்கள் ஊடாக ஆண்மைய சமூகமாக திருச்சபை கிறிஸ்தியலின் தளத்தில் மரியியலை உருவாக்கியது. அடையாளங்களும், அதன் வழி கிளர்ந்த ஒவியங்கள், சுருபங்கள், சடங்குகள், பாடல்கள், பிரார்த்தினைகள் பெண்கள் விடுதலையின் பின்புலத்தில் மறுவாசிப்பு செய்யப்படல் வேண்டும்.

கடந்த காலங்களில் இறையியல் கோலங்கள் வளர்ச்சி அடைவதற்கும் அவை வாசகர்களின் கைகளில் சென்றடைவதற்கும் முழுமூச்சுடன் முன்னின்று உழைத்த உறுப்பினர்களான அருட்சகோதரர்கள் யே. ஜெஸ்லி ஜெகானந்தன், ஆ. மில்ரன் தேவராஜ், அ. கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ ஆகியோருக்கும் ஆக்கங்களை வழங்கியவர்கள், நிதியுதவி புரிந்தோர், ஆலோசனைகள், விமர்சனங்களைப் பகிர்ந்து கொண்டவர் களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம் அத்தோடு இப்பணியை (நிர்வாக) தொடர்ந்து ஆற்ற ஆர்வத்தோடு தம்மை நிர்வாகக் குழுவில் இணைத்துக் கொண்டவர்களாகிய அருட் சகோதரர்கள் ஆ. ஜஸ்ரின், கீ. லக்ஸ்மன், ப. றெனாட் செறில்நெஸ் ஆகியோரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

**நிர்வாகக் குழு**

# கவிதைக் கோலங்கள்

## போரை அகற்று ஏங்கும் அமைதி தா!

அமைதி ஒன்று அனுபவிக்க எம் மக்களுக்கு
அருகதை இல்லையா?
தவிக்கின்றோமே....
துடிக்கின்றோமே....
ஒரு விடையும் இல்லாது
காத்திருக்கின்றோம்.



நீ வேண்டும் இறைவா
நீதி வேண்டும் இறைவா!
நீயாக வா!
நிஜமாக வா!! - எம்
நிழலாக வா!!!
நிம்மதியாக வா!!!!

சொல்லற்கரிய சோகங்களை
சொந்தமாக்கி வாழ்ந்திருந்து.
பசி இருந்து
பட்டினி கிடந்து
பச்சிளம் பிள்ளைகளுக்கு
பால்மாவும் இல்லாது
போதாதென்று கொள்ளைக்
காய்ச்சலும் கொண்டு

பரிதவிக்கின்றோம்....
பாரையா எம் பிஞ்சுகளை....

கொலை கண்டு
இரத்த வெறி கொண்டு
கோரத்தனமும்
கொடூரமும் - எம்
நிலத்திற்கே
சொந்தமாகி விட்டதே!
என்ன பாவம்
செய்தோமையா?

கறை அகற்றி
கருணை கொண்டு வா!
கொலை அகற்றி
வாழ்வு கொண்டு வா!
வெறி அகற்றி
வெற்றி கொண்டு வா!
சுயநலம் அகற்றி
சுதந்திரம் கொண்டு வா!
வன்மம் அகற்றி
அன்பு கொண்டு வா!
பகைமை அகற்றி
பாசம் கொண்டு வா!
போரை அகற்றி - ஏங்கும்
அமைதி கொண்டு வா!!!

அருட்பணி. பா. பிராயன்

# மார்கழி வசந்தம்

சரித்திரத்தில் பொதிந்த பொன்னெழுத்து
இது பொருள்கொண்டு பொங்கி எழுந்த வரலாற்று நிகழ்வு
சமுத்திரமே சாவுக்குழியென சஞ்சரிக்கும் - இனி
சத்தியர்கள் எம் நிஜ வாழ்க்கை
சுத்தமாய் சறுக்கி சரிந்து விழும் நிலையில் -இன்று
கந்தை வேட்டியில் மானத்தை மறைத்து
கறையுள்ள கண்ணாடியில் விம்பத்தைப் பொறித்து
வெற்றுக் குவளையில் பால் ரசம்
பருகும் பரிதாப நிலையில்
பரிதவிக்கும் கவியவன்
மனித மனங்களில் சூடிடும் - மாய
வித்தைகள் ஆயிரம் அத்தனைக்கு
மத்தியிலும் சஞ்சரிக்கும் இச்
சிற்றுலகம் சிதைந்து சிதறிய
மனுவடுகளில் சம்பவிக்கும் ஆயிரம்
பிறப்புக்களுள் அமைதி தரும்
சிறப்பு அவதாரம் உண்டா?
கொடுமை, வறுமை, வன்முறை எனும்
வரையறையற்ற வஞ்சனைகள் ஓய்ந்திட
உத்தமன் வரவு நிகழுமா?
நிலைத்திடா துயரங்கள் ஓய்ந்து
நித்தமும் உந்தன் பிஞ்சுப்
பாலகன் பிறப்பால் சாந்தி,
அமைதி, சுபீட்சம் நிலைத்திட
நித்திய பாலன் நீதியின் கதிராய்
நின் தீவினில் தவண்டிட
நிலை அமைதி
நின்னவன் பரிசாய்க் கிடைத்திட
மார்கழி வசந்தம் வழிசமைக்கும்.

அருட்சகோ. செ. சுதர்சன்

# உண்மை வி(டுத)லை

### சந்தர்ப்பம்

ஒன்று எம் பக்கம் - இன்று
சார்ந்து நிற்கின்றது.
பலகாரங்கள் இல்லை
பகட்டாடைகள் இல்லை
கொண்டாட்டங்கள் இல்லை — வீண்
குதூகலங்கள் இல்லை - ஆயினும்
உண்டு நமக்கு நல்லதோர் சந்தர்ப்பம்.
"அர்த்தமுள்ள நத்தார்" இன்று நம் பக்கம்

### அன்று

உரோமையரின் அநீத ஆட்சியில்
வெறுப்புணர்ச்சி மேலிட்டவர்களாய்
விரக்தியின் விளிம்பில் நின்ற
இஸ்ராயேலர் எதிர்பார்த்தது தான் என்னே?
உண்மை மெசியா!

### இன்று


வாழ்வின் எல்லாக் கூறுகளும்
விதிவிலக்கில்லாமல் - நாசுக்காக
நசுக்கப்படுகின்ற இந்நாட்களில்
நமது எதிர்பார்ப்புத்தான் என்னே?
நமக்கு 'உண்மையில்' வேண்டியதுதான் எது?
உண்மை விடுதலை! (எவ்வகை?)

### நடைமுறையில்

ஒவ்வாத விடயங்களை
நம்மவர்கள் நாடுவதில்லை என்பதில்
வியப்பேதும் இல்லை தான் - ஆயினும்
நிச்சயமற்ற மறுகணத்தில்
"ஆன்மீகத்தை" (மதம் அல்ல) தவிர
வேறு எது தான்
நடைமுறைச் சாத்தியமாயிருக்க முடியும் இவர்களுக்கு

*வாழ்வு*

நிலைத்து நிற்க வசதிகளை தேடும் மனிதன்
நிலை குலைந்து "எது தான் நிச்சயம்?"
எனக் கேட்ட போது பதில் "மரணம்"தான்
நிச்சயமானது ஒன்றே; அந்த ஒன்றே
மனிதனுக்குப் பயப்பீதியை ஏற்படுத்தும்போது...
மரணத்தை வென்ற ஒருவரின்
பிறந்த தினம் எமக்கு வாழ்வு அளிக்கும்.
தினம் தானா?



**உண்மையில்**

மனிதக் குழந்தைகளுடனான
அனுபவமே இப்படியென்றால்
இறை அனுபவம் பெற
பாலன் இயேசுவின் பக்கம்
திரும்புவோம்.
உள்ளத்தில் குடிலமைத்து
அவர் வார்த்தையில் வாழ்வமைத்து
வாழ்வாங்கு வாழ
வாரீர் வாரீர்
விலைமதிப்பற்ற அவர் அருள்
இலவசம், இனாம், விலையே இல்லை
வாரீர் வாரீர்
வணங்குவோமே பாலனை
உண்மை விடுதலை பெறுவோம்.

அருட்சகோ. றொறொபின்சன் அமதி.

# இனி அமைதி வேண்டும்




ஏழையின் உருவில் மரியின் கருவில்
இரவின் மடியில் வானவர் இசையில்
பாருக்கு ஒளி கொடுக்க
வீரமுடன் எழுந்தவனே!

ஈர விழிகளுடன் நாம் இங்கே
மௌன மொழி பேசி – தினம்
புன்னகைக்கும் பூக்களாய் – உன்
திருப்பாதம் பணிகின்றோம்.

நான்கு வருட அமைதியும்
அதற்குள் ஒரு சுனாமியும்
தங்கு தடை இன்றி
பொங்கி எம்மை அழித்துவிட்டதுவே.

நித்தம் ஒரு யுத்தம் முத்தம் இடுகிறது
அர்த்தம் இல்லாமல் சத்தம் போடுகிறது
புத்தம் புது ஆயுதங்கள்
வட்டம் இட்டு எம் இரத்தம் கொட்டுகிறது.

நேசக் கயிறுகள் அறுந்தது
பாச உறவுகள் பிரிந்தது
பசியும் பட்டினியும் தொடர்கிறது – எம்
வாழ்வை இவை ருசி பார்க்கின்றதுவே.

எமக்கு ஒரு பதில் வேண்டும்
அமைதி வாழ்வு அதில் வேண்டும்
காக்கும் கரமாய் நீ வர வேண்டும்
காய்க்கும் மரமாய் நாம் மாற வேண்டும்.

அருட்சகோ. மை. நிக்சன் கொலின்

# மீட்பின் மன்னன்



கார்த்திகை ஏன் பூத்தது
கர்த்தர் வரவை எதிர் பார்த்தது
கார் மேகம் ஏன் எழுந்தது
ஆண்டவன் வரவுக்காய் துதி சொல்ல.

கார் மேகம் கரைய காரிருள் ஒழிய
மார்கழி குளிரில் பிறந்தார் பாலன்
மரியன்னை மடியில் பிறந்த மலரது
பாலகனாய் எம்மீட்பராய் மண்ணிலே மலர்ந்தது.

மண்ணுலகை மீட்க வந்த மாமன்னா யேசு பாலா
மானிடர் எமக்காய் உம்மைத் தந்தீரே ஐயா
மகிழ்ச்சிதான் எம் மனதில் இல்லையே - இன்று
மரணம்தான் எம் வாழ்வின் தொல்லையாச்சு.

யுத்தம் எம்மை சிதைத்தால்-உம்
சித்தம் எதுவென அறிந்திடோம்
நித்தம் எம்மவர் சாகிறார் - இதன்
அர்த்தம் எதுவென காட்டீரோ.

ஆராரோ பாலா ஆராரோ
யார் யாரோ இங்கு ஆழுகின்றார் பாரீரோ
கிபிர் வந்தானே எம்மவர் அங்கமெல்லாம்
கால் வேறு கை வேறாய் ஆய்ச்சே.

கன்னி மரியின் கலங்கமில்லா கண்மணியே
கள்ளம் கபடம் அற்ற காவலனே
கருகிப்போகும் எம்மவர் வாழ்விற்கு
வழி காட்டும் இனி ஐயா.

அருட்சகோ. ப. பத்திநாதர்

# வேணாம் நீ வர...

பாலகனே
காலமுனை
காணத்தவமிருக்க
வேணாம் நீ வர
வேணமென
விந்தை கவிபாட
உந்தை நெஞ்சு
எந்தனை தாங்குமையா?

அன்பே ஆருயிரே!
அன்னை மரிமகனே
உன்னை தாலாட்ட
பல்குழலின் வேட்டொலியும்
ஆட்லெறியின் அலறலும்
ஆங்காங்கே அதிநவீன
ஆயுதத்தில் பலியாவோர்
அவலப் பேரொலிதான்
அதிகம் எம்மண்ணில்
இத்தனைக்கும் மத்தியிலே
பாலகனே நீ பிறந்தால்
பரிதாபமாய் - எம்
பாலர்போர் பரிதவிக்க
நேரிடுமோ?

உன்னதரின் பாலகனே!
உலகத்தார் மீட்பொளியே
பட்டினியும் பஞ்சமும் - எம்
பாரை ஆட்கொள்ள
பாலர் பலமிழந்து வளர
கன்னியரும் காளையரும்
காணமல் போக
படுக்கை பலருக்கு
பலிக்களமாகிட
உள்ளம் உறவிழந்து
இழப்பதற்கு ஏதுமின்றி
ஏதிலியாய் எதிர்காலமில்லாது
ஏங்கும் எம்
எதிர்ப்பார்ப்பே பாலகனே!
உந்தனையும் இழந்துவிட்ட - இவ்
இம்மண்ணின் இன்னலிலே
எத்தனைக்கு ஏதுண்டு?
காத்திருக்க களிகூர......

**அருட்சகோ. பா. அ. யேசுதாசன்**
**அமதி**

# இயேசுவின் பிறப்பும்: மாசில்லாக் குழந்தைகள்

## அன்றும் இன்றும்

அருட்சகோதரி அருள் தி.கு.

### முன்னுரை

வரலாற்றில் நிகழ்ந்த சில பிறப்புக்கள் வரலாற்றையே மாற்றியிருக்கின்றன. சிலரின் பிறப்புக்கள் வரலாற்றிற்கு அணி சேர்த்துள்ளன. சிலரின் பிறப்புக்கள் வரலாற்றையே பின் நோக்கித்தள்ளியிருக்கின்றன. ஆனால் இயேசுவின் பிறப்பு வரலாற்றிற்கே வாழ்வு கொடுத்தது. வரலாற்றின் பாதையையும், பார்வையையும் மாற்றி அமைத்தது. இயேசுவின் பிறப்பு புதிய பரிமாணங்களைத் தந்து புது உலகப் பரிமாணத்திற்கு அழைத்துச் சென்றது அவரது பிறப்பு, ஆம் அவரது பிறப்பிற்காக, பேச இயலாத பச்சிளங் குழந்தைகள், செந்நீர் சிந்தி தங்களை இயேசுவிற்கு சாட்சி களாக்கிக் கொண்டனர். இக்குழந்தைகள் மாசுமறு வற்றவர்கள், மீட்பர் இயேசுவிற்காக இரத்தம் சிந்திய முதல் மறைசாட்சிகளாக திருச்சபை இவர்களை நினைவு கூருகிறது. இறைமகன் இயேசு இம்மண்ணிலே பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் மாசுமறு வற்ற எத்தனையோ பச்சிளங் குழந்தைகள் அறியாத பலருக்காக தங்களையே உயிர்த்தியாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் தியாகத்தில் பலர் இன்றும் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள். எனவே மனிதம் மாண்புறுவதற்காக இறைமகன் இயேசு இம் மண்ணில் அவதரித்தார். அந்த இயேசுவிற்காக இறந்த மாசில்லாக் குழந்தைகளின் சாட்சிய வாழ்வு பற்றி இங்கு ஆராய்வோம்.

> இறைமகன் இயேசு இம் மண்ணிலே பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் மாசுமறுவற்ற எத்தனையோ பச்சிளங் குழந்தைகள். அறியாத பலருக்காக தங்களையே உயிர்த்தியாகம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## ஞானிகளின் வருகை

விவிலிய அறிஞர்கள் பலர் மத்தேயு கூறும் "ஞானிகள் வருகையில்" எந்த வரலாற்றுத் தன்மையையும் காண மறுக்கின்றனர். குழந்தை இயேசுவைப் புதிய மோசேயாகக் காட்ட விளையும் எண்ணத்தில் விடுதலைப்பயண மோசேயின் குழந்தைப் பருவக்கதைகளின் பின்னணியில், மத்தேயு இயேசுவின் பிறப்பை ஒட்டிய நிகழ்வுகளை கற்பனையில் உருவாக்கித் தந்துள்ளார் என்பது இவர்களது வாதம். யூத வரலாற்று அறிஞர் யோசேப்பு கூட ஞானிகள் வருகை வழக்கில் இருந்ததை "யூத வரலாறு" என்று தனது நூலில் குறிப்பிடுகிறார். வரலாற்றுப் பூர்வமாக சிந்தித்துப் பார்த்தோம் என்றால், பாரசீகப்பகுதியில் இருந்தோ, அரேபியாப் பகுதியில் இருந்தோ, பபிலோனியப் பகுதியில் இருந்தோ, மேற்கே மத்திய தரைக்கடல் பகுதி நோக்கி ஞானிகள் வந்தார்கள் என்ற செய்தி நம்பமுடியாத, அல்லது நடக்க முடியாத ஒன்றோ அல்ல.

அரசவை முதல், மக்கள் கூடும் பொது இடங்கள் வரை இத்தகைய ஞானிகள் வரவேற்கத்தக்க மனிதர்களாகவே விளங்கினார்கள். இத்தகைய ஞானிகளிடம் அரசர்கள் ஆலோசனை நடத்தினார்கள் என்பதும் ஆதாரபூர்வமாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒன்றாகும்.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யூதர்கள் மத்தியில் 'மெசியா' அரசராகப் பிறப்பார் என்ற கருத்து அழுத்தமாக இருந்தது. ஏனெனில் கும்ரான் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட தோல் சுருள்கள் வழியாக 'மெசியா' 'கிறிஸ்து' தோன்றுவார் என்ற எதிர்பார்ப்பு இவர்களிடம் காணப்பட்டது. எனவேதான் "யூதர்களின் அரசாகப் பிறந்தவர் எங்கே? என்ற தேடலுடன் வந்த கீழ்த்திசை ஞானிகளை ஏரோது அழைத்து அவரைப் பற்றி விசாரித்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன."

> எந்தப் பட்டத்தையும், அரசாட்சியையும் தக்க வைப்பதற்கு இவ்வளவு ஆண்டுகள் கண்ணும்கருத்து மாகச் செயற்பட்டாரோ, அந்த இடத்திற்கு உரிய வராக இயேசுவை ஞானிகள் சுட்டிக் காட்டியபோது ஏரோது கலக்கமடைந்தது மட்டுமல்ல, அதற்காக எந்தவொரு கொடுஞ் செயலையும் செய்யத் தயங்கவில்லை.

## ஏரோதின் மனநிலை

தனது 25வது வயதில் கலிலேயாவின் ஆளுநராக ஏரோது தனது தந்தையால்

நியமிக்கப்பட்டது முதல் (கி.மு. 40), தனக்குக் கிடைத்த அரசுரிமையையும், ஆட்சிகளையும் தக்க வைக்கும் வரை (கி.மு. 4) அவர் எந்தவொரு கொடுஞ் செயலையும் செய்ய தயக்கம் காட்டவில்லை. ஆதலால் தான் எந்தப் பட்டத்தையும், அரசாட்சியையும் தக்க வைப்பதற்கு இவ்வளவு ஆண்டுகள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டாரோ, அந்த இடத்திற்கு உரியவராக இயேசுவை ஞானிகள் சுட்டிக் காட்டிய போது ஏரோது கலக்கமடைந்தது மட்டுமல்ல, அதற்காக எந்தவொரு கொடுஞ் செயலையும் செய்யத் தயங்கவில்லை. இவ்வாறான தன்னாட்சிக்கு வந்த ஆபத்தை வேரறுப்பதில் மிகவும் துணிவுடன் செயற்பட்டார்.

## இயேசுவின் மேன்மையும் ஏரோதின் செயற்பாடும்

"பிற இனத்தார் உன் ஒளிநோக்கி வருவர். மன்னர் உன் உதயக் கதிர் நோக்கி நடை போடுவர்" என்றார் எசாயா இறைவாக்கினர். யூதர்களின் அரசரைக் கண்டு வணங்குவதற்காக கீழ்திசையில் இருந்து ஞானிகள் வரும் போது யூதர்களும் அவர்களது அரசரும் அறியாமையில் மூழ்கியிருந்தார்கள். அவ்வேளையில் இயேசுவை இறைமகனாக அடையாளம் காண அவர்களால் முடியவில்லை.

ஆனால் ஞானிகள் விண்மீனைக் கண்டு மட்டில்லா மகிழ்சி அடையும் போது ஏரோதும் அவரோடு சேர்ந்து எருசலேமும் கலக்கமடைகிறது. ஏனென்றால், தனக்கெதிராகப் பிறந்துள்ள அரசனான குழந்தை இயேசுவை அழிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் மூழ்கியிருந்த ஏரோது அறிந்தோ, அறியாமலோ "நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன்" என்று கூறுவதன் மூலம் இயேசுவின் மேன்மையை வெளிக் கொணர்கிறார் நற்செய்தியாளர் மத்தேயு.

> ஞானிகள் தாங்கள் இயேசுவுக்கு அளித்த காணிக்கைகளின் மூலம் அவரை அரசராகவும் (பொன்) இறைவனாகவும் (சாம்பிராணி) முழுமனிதனாகவும் (வெள்ளைப் போளம்) ஏற்றுக் கொள்வதன் மூலம் இயேசுவின் மேன்மை இன்னும் அதிகமாக உணரப்படுகின்றது.

மேலும் ஞானிகள் தாங்கள் இயேசுவுக்கு அளித்த காணிக்கைகளின் மூலம் அவரை அரசராகவும் (பொன்) இறைவனாகவும் (சாம்பிராணி) முழுமனிதனாகவும் (வெள்ளைப் போளம்) ஏற்றுக் கொள்வதன் மூலம் இயேசுவின் மேன்மை இன்னும் அதிகமாக உணரப்படுகின்றது.

ஞானிகள் வாயிலாக 'யூதர்களின் அரசன் பெத்லகேமில் ஒரு குழந்தையாகப் பிறந்துள்ளார் என்பதை அறிந்த ஏரோது அரசன் ஞானிகள் தன்னிடம் திரும்பி வராமல் சென்றதைக் கேள்விப்பட்டு கடும் கோபம் கொண்டு ஆட்களை அனுப்பி பெத்லகேமில் அதன் சுற்றுப்புறம் எங்கும் இரண்டு வயதும் அதற்குட்பட்டதுமான ஆண் குழந்தைகளை எல்லாம் கொன்றொழித்தான். இவனது இந்தக் கொடிய செயற்பாட்டின் மூலம் எரேமியா 31:14 இல் கூறப்பட்டுள்ள இறைவாக்கான "இராமாவிலே ஒரு குரல் கேட்கின்றது ஒரே புலம்பலும் அழுகையுமாய் இருக்கின்றது. இராக்கேல் தனது குழந்தைகளுக்காக அழுது கொண்டிருக்கிறாள். ஆறுதல் பெற அவள் மறுக்கிறாள். ஏனெனில் அவளுடைய குழந்தைகள் அவளோடு இல்லை" என்ற இறைவாக்கு நிறைவேறுவதாக மத்தேயு கூறுகிறார்.

இந்நிகழ்ச்சி மூலமாக ஏரோது அரசனின் குணமும், செயல்களும், குறிப்பாக அவனது கடைசி ஆண்டுகளில் அவன் செய்தவைகளும் இந்நிகழ்ச்சி உண்மையாக நடந்திருக்கலாம் என்பதற்கு சான்றாக அமைகின்றன. யோசிப்பஸ் என்ற வரலாற்று அறிஞர் நேரடியாக இந்தக் கொடுஞ் செயலைப்பற்றி எடுத்துக் கூறாத போதும் ஏரோது அரசன் செய்த இதைப் போன்ற, இதைவிடக் கொடூரமான செயல்களை எல்லாம் தன்னுடைய நூலில் விவரிக்கிறார். குறிப்பாக தனது இறப்பைக் குறிப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு உறுப்பினரைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஏரோது அரசன் ஆணையிட்டிருந்தான் என்று கூறுகிறார்.

## மாசில்லாக் குழந்தைகள் அன்றும் இன்றும்

தொடக்ககாலத் திருச்சபையில், ஏரோது அரசனால் கொலைசெய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை பல்லாயிரமாக இருக்கலாம் என்று கருதப்பட்டாலும் தொல்பொருள் செய்திகளில் இருந்து இந்த எண்ணிக்கை ஏறக்குறைய 20 அல்லது 30 ஆக இருக்குமென சரித்திர ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறாக கொலைசெய்யப்பட்ட குழந்தைகள் மாசுமறுவற்றவர்கள். இவர்களே கிறிஸ்துவுக்காக செந்நீர் சிந்திய முதல் மறை சாட்சிகள்.

இயேசு தம் அரசரென பேச இயலாத இந்தப் பச்சிளங் குழந்தைகள் இறந்து, இயேசுவிற்கு சாட்சி பகர்ந்தார்கள். வாழ்வின் ஊற்று குழந்தையாகத் தொழு

> வாழ்வின் ஊற்று குழந்தையாகத் தொழுவத்தில் பிறந்த இயேசுவிற்கு வாழ்வினூடாக சான்று பகர பிறந்த குழந்தைகள் தங்களது அரசரது புகழை வாயினால் அல்லாமல், தங்கள் சாவினால் பாடினார்கள்.

வத்தில் பிறந்த இயேசுவிற்கு வாழ்வினூடாக சான்று பகர பிறந்த குழந்தைகள் தங்களது அரசரது புகழை வாயினால் அல்லாமல், தங்கள் சாவினால் பாடினார்கள்.

இவ்வாறாக இயேசுவிற்காக இரத்தம் சிந்தி சான்று பகர்ந்த குழந்தைகளை மாசில்லாக் குழந்தைகளென முதலாம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றது. இக்குழந்தைகள் வேத சாட்சிகளென திருச்சபையின் தந்தையர்களான புனித ஏரோணிமுஸ்சும், புனித அகுஸ்தீனும் எடுத்துக் கூறுகிறார்கள். மேலும் இக்குழந்தைகள் உலகம், உடல், பசாசு போன்றவற்றால் ஏற்படும் தீமைகளை அறியாமல் மோட்ச முடியை பெற்றுக் கொண்டார்கள் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அன்று தொடக்க காலத் திருச்சபையில் நடந்தது போலத் தான் இன்றும் எத்தனையோ குழந்தைகள் எம் சூழலில் மரணித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக சுனாமி என்னும் கொடிய பேரலையினால் எத்தனையோ வாழப்பிறந்த பச்சிளங் குழந்தைகள் கொடிய அரக்கனினால் சாவை அணைத்துக் கொண்டார்கள். இந் நிகழ்வு அன்றுடன் மட்டும் முடிந்து போகவில்லை, மாறாக அது தொடர் கதையாக, நிஜமாக எம் சூழலில் நாளாந்தம் நடந்தேறும் நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டது.

உலகம், உடல், பசாசு போன்ற பாவ அடிமைத்தனங்கள் பற்றி அறியாத, பேச இயலாத பச்சிளம் பிஞ்சுகள், வளர்ந்து வரும் விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியை சற்றேனும் அறிந்து கொள்ளாத குழந்தைகள், இவற்றினால் உருவாக்கப்பட்ட ஆயுதங்களுக்கு இரையாக்கப்பட்டு, மானுட விடுதலைக்காக தங்களை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு புறம் இருக்க, எம் பிரதேசங்களில் நடந்து வரும் யுத்தத்தினால், மறைமுகமாக பொருளாதாரத்தடை ஏற்பட்டு எத்தனையோ பிஞ்சு மழலைகள், அடிப்படை வசதிகள் இன்றி நாளாந்தம் தங்களது செந்நீரை சொட்டுச் சொட்டாக சிந்தி தங்களையே கரைத்துக்கொண்டு பலரின் மீட்பிற்காக அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இன்று எத்தனையோ குழந்தைகள் உலகத்தைப் பார்க்காமல், கருவறையே அக் குழந்தைகளுக்கு கல்லறைகளாக்கப்படுவது எம் வாழ்வில் நடந்தேறுகின்ற நிகழ்வுகளாகிவிட்டன.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் என்றுமில்லாதவாறு மனித வாழ்வில் பல

தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. இதன் காரணமாக இன்று எத்தனையோ குழந்தைகள் உலகத்தைப் பார்க்காமல், கரு வறையே அக்குழந்தைகளுக்கு கல்லறைகளாக்கப்படுவது எம் வாழ்வில் நடந்தேறுகின்ற நிகழ்வுகளாகிவிட்டன. இக்குழந்தைகளும் மாசற்ற குழந்தைகள் என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதுண்டா? இவ்வாறு எத்தனையோ மாசில்லாக் குழந்தைகள் பலர் வாழ்வதற்காக யாரும் அறியாமல் தங்களையே அழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

## முடிவாக:

ஒவ்வொரு மனித உயிரும், இறைவனால் அவரது சாயலில் உருவாக்கப்பட்டது. மனித உயிர் இறை பார்வையில் மகத்தானது, விலை மதிப்பிற்குரியது. எனவே மனித உயிரை எமக்கருளிய இறைவன், பிரமாணிக்கத்துடன் உண்மை உறவு முறையுடன் அதனை வழி நடத்தும் ஆற்றலையும், சக்தியையும் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ளார். ஆதலால் தான் உலகில் வாழ எனப் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் இறைமகிமைக்காக வாழ்ந்து அவருக்காக தம் வாழ்வை அர்ப்பணிக்க அக்குழந்தைகளை வளர்க்க வேண்டிய கடைப்பாடு எல்லோருக்கும் உரியது என்பதை எம் வாழ்வில் கொண்டு வாழ்வோம், வாழ வேண்டும். மேலும் மாசுமறுவற்ற பல குழந்தைகள் தம் இறப்பின் மூலம் நம் அரசர் இயேசுவின் பிறப்பிற்கு சாட்சி பகர்ந்தார்கள். இன்னும் பல பச்சிளங்குழந்தைகள் தாம் அறியாத பலருக்காக இறப்பின் மூலம் தம்மையே சாட்சிகளாக்கிக் கொள்கிறார்கள். இவர்களின் மூலம் இறைவாக்கினர் எரேமியாவின வார்த்தைகள் எம் ஒவ்வொருவருக்கும் திடமளிக்கின்றன.

“நீ அழுகையை நிறுத்து. கண்ணீர் வடிக்காதே, ஏனெனில், உனது உழைப்பிற்குப் பயன் கிடைக்கும்...... தங்கள் பகைவரின் நாட்டினின்று அவர்கள் திரும்பி வருவார்கள்.... உன் எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில் நம்பிக்கை உண்டு.... உன் பிள்ளைகள் தம் நாட்டிற்குத்திரும்புவர்”. (எரேமி.31.:.16–17)

## துணை நின்ற நூல்கள்


1. திருவிவிலியம்
2. விவிலியக்களஞ்சியம் V
3. Butler's lives of the Saints - Volume IV
4. தூயவர்களின் வரலாறு.

# குடும்ப வாழ்வில் மரியா

திரு. சி. சா. பங்கிராஸ்

குடும்பம் அன்பும் உறவும் சங்கமமாகும் ஓர் நிறுவனம், சமுதாயத்தின் ஓர் அங்கம், குட்டித்திருச்சபை, பல்கலைக்கழகம், ஒரு முன்மாதிரி உலகம். இங்கு பயின்று கொண்டே பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர், பெற்றோரின் பணிகள் புது உலகை உருவாக்கும் அன்புக்கனிகளாம் குழந்தைகளைப் பயன்கொடுக்கும் கருவிகளாய்ப் பண்படுத்தும் பண்ணை, குடும்பம் ஆகும்.

இக்குடும்ப வளர்ச்சியில்தான் சமுதாய வளர்ச்சியே அடங்கியுள்ளது. சமுதாய வளர்ச்சியில் தான் நாட்டு வளர்ச்சி அடங்கியுள்ளது. குடும்ப வளர்ச்சி மனித வாழ்வில் பொதிந்துள்ளது. மனித வளர்ச்சியோ மனிதனை மனிதனாக மதிப்பதிலும், இறைவனையும், பிறரையும் அன்பு செய்வதிலும் அடங்கியுள்ளது.

> அற்புதமான விசுவாசக்கலையை தம்குடும்ப வாழ்வில் என்றும் வாழ்ந்து எல்லாக் குடும்பங்களுக்கும் முன் மாதிரியாக விளங்குவது திருக்குடும்பமாகும்.

ஒரு கிறிஸ்தவனுக்கு வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இறையருள் நிகழ்வே. அந்நிகழ்வின் அடியில் புதைந்துகிடக்கும் இறையன்பைக் கண்டுணர்ந்து வாழ்வுடன் தொடர்புபடுத்தி எதிர்ப்படும் சவால்களைச் சந்திக்கின்ற பக்குவத்தை அவன் பெறும்போது தன்னைச் சூழ்ந்து நிற்கும் இறை பிரசன்னத்தை உய்த்துணர்ந்து கொள் கின்றான். குடும்ப வாழ்வில் திருமணத்தின்போது, கணவனும் மனைவியும் ஒருவர்

ஒருவரைத் தம் வாழ்க்கைத்துணையாக இறைவன் திருமுன் ஏற்றுக் கொள்ளும்போதே அவர்களின் விசுவாசப்பயணம் தொடங்கி விடுகின்றது. அது குடும்பத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தொடர்கின்றது. தம்பதியர்கள் தங்கள் நடுவே இருக்கின்ற இறைவனைத் தம்வாழ்க்கை நிகழ்ச்சிகளில் தொடர்ந்து தேடுவது ஓர் அற்புதமான விசுவாசக்கலை. இத்தகைய அற்புதமான விசுவாசக்கலையை தம்குடும்ப வாழ்வில் என்றும் வாழ்ந்து எல்லாக் குடும்பங்களுக்கும் முன் மாதிரியாக விளங்குவது திருக்குடும்பமாகும். திருக்குடும்பம் தம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விற்கும் அளித்த பதில்கள் விசுவாசத்தின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

## குடும்பத்தில் அன்னை மரியா

மரியா ஒரு குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவள். அவளின் பிறப்பு முதல் வாழ்வின் இறுதிக் காலம் வரை எவ்வாறு வாழ்ந்தாள் என்பதை உற்றுப்பார்ப்போமானால் அது எம் ஒவ்வொருவரின் வாழ்வுக்கும் ஒளி விளக்காக, உந்துசக்தியாக இருப்பதை உணரமுடியும். தூய மரியாவின் வாழ்வுபற்றி திருவிவிலியத்தில், பாரம்பரியங்களில் முழுமையாகச் சொல்லப்படாவிட்டாலும் பல்வேறு பகுதிகளிலும் பரவலாகக் காணப்படும் குறிப்புகளிலிருந்து அவளின் விசுவாசம் நிறைந்த வாழ்வைக் கண்டு கொள்ளலாம்.

சுவக்கீன் அன்னாள் குடும்பத்தின் கனியாக மரியா பிறந்தாள். ஆழ்ந்த விசுவாசம் நிறைந்த குடும்பம் அது. பல காலம் பிள்ளைப்பேறு இல்லாதிருந்தது. இடைவிடாத இறைவேண்டுதலின் பயனாக மரியா பிறந்தாள் என்பது பாரம்பரியம் கூறும் செய்தி. கனியிலிருந்து அதன் மரத்தை அறிந்து கொள்வது போல, அன்னை மரியாவின் வாழ்வு அவரின் பெற்றோரின் வாழ்வு எப்படியாக அமைந்திருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. நல்ல மரம்தான் நற்கனியைக் கொடுக்கமுடியும்.

மரியா தம்
பெற்றோரின்
வழிகாட்டலிலும்,
இறை நம்பிக்கையிலும்,
இறை உறவிலும்
வளர்ந்து வந்தாள்.

மரியா தம் பெற்றோரின் வழிகாட்டலிலும், இறை நம்பிக்கையிலும், இறை உறவிலும் வளர்ந்து வந்தாள். பெற்றோரிடமிருந்து சிறந்த நற்பண்புகளைக் கற்றுக்கொண்டார். பிற்காலத்தில் அவள் எதிர்கொண்ட பல்வேறு சவால்களுக்கும்

முகம் கொடுக்க வேண்டிய உளப் பக்குவத்தைப் பயின்று கொண்டாள். மரியா எப்போது பிறந்தார் எனத் திருவிவிலியத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும், கபிரியேல் தூதன் இயேசுவின் பிறப்புப்பற்றிய செய்தியைச் சொன்னபோது மரியா சுமார் பதின்நான்கு வயதாக இருந்தாள் என்பது பாரம்பரியமாகச் சொல்லப்படுகின்றது. இக்கணிப்பின்படி மரியா கி.மு. 21ம் ஆண்டில் பிறந்தாள் எனக் கொள்ளப்படுகின்றது.

## பிறப்பிலே சிறப்பு அருள் பெற்றவள்

மரியா தன் தாயின் வயிற்றிலேயே அமல உற்பவியாக இருந்தாள். பாவ மாசு அற்றவளாக இறைவனின் "சிறப்பு அருள்" பெற்றிருந்தாள். "கருவான முதல் வினாடியிலிருந்தே சிறப்புமிகு புனித மாட்சியால் அணிசெய்யப்பட்டிருந்த நசரேத்தூர் கன்னி" என்று 2ம் வத்திக்கான் சங்கம் மரியாளை வர்ணிக்கின்றது. (திருச்சபை எண் 56) மரியாவின் பெற்றோர்களான சுவக்கீன் - அன்னாள் யூத இனத்தவர்கள், யூத மதச்சடங்கு முறைமைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள், அந்த முறைப்படிதான் மரியா பிறந்த 80ம் நாள் எருசலேம் ஆலயத்தில் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டாள். குழந்தைக்கு மரியா என்று பெயர் இடப்பட்டது. மரியாவின் இளமைப்பருவம் பற்றி திருவிவிலியத்திலோ பாரம்பரியம் வழியாகவோ அதிகம் அறிய முடிவதில்லை. அன்றைய சூழலில் சமய, சமூக, சட்டதிட்டங்களுக்கு அமைவாக வாழ்ந்து வந்தார்கள்.

## நசரேத்தூர் மரியா

தூய லூக்கா தம் நற்செய்தியில் மரியா கலிலேயாவிலுள்ள நசரேத் என்னும் ஊரில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் தாவீது குடும்பத்தராகிய யோசேப்பு என்பவருக்கு மண ஒப்பந்தமானவர் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த நசரேத்தில்தான் கடவுளால் அனுப்பப்பட்ட கபிரியேல் என்னும் வானதூதர் தோன்றி "அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்" என வாழ்த்தினார்.

## குழப்பத்திலும் இறை நம்பிக்கை

மரியா இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கலங்கினாள். இந்த வாழ்த்து எத்தகையதோ என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள். மரியாவுக்கு ஏற்பட்ட இந்த குழப்பம், கலக்கம், அச்சம், மனிதப் பெண் என்ற வகையில் இயல்பானதே. இருந்தபோதிலும் இறைவன்மட்டில் தாம் கொண்டுள்ள ஆழ்ந்த விசுவாசத்தின்

அடிப்படையில் பதிலைக் கண்டுகொள்கின்றாள். "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்ற நம்பிக்கையால் மரியா தெளிவுபெற்றாள்.

கன்னிப்பெண் திருமணமாகுமுன் கருத் தாங்குவது சமூகத்தில் அவமானத்தை, அவப் பெய்ரை வருவிப்பது மட்டுமல்ல, அன்றைய யூத சமூதாயத்தில் அத்தகையவர்கள் கல்லால் எறியப்பட்டு கொல்லப்படுவார்கள். கணவனாலும் கைவிடப்படுவர். இத்தகைய ஓர் இக்கட்டான நிலையிலும் மரியா இறைவனின் திட்டத்தை ஏற்றுக்கொள்கின்றாள். இறைவன் தம்மைக் கைவிட மாட்டார் என்ற ஆழ்ந்த உறுதியான விசுவாசத்தின் உச்சநிலையில் மரியா விளங்கினாள்.

> **ஓர் இக்கட்டான நிலையிலும் மரியா இறைவனின் திட்டத்தை ஏற்றுக்கொள்கின்றாள். இறைவன் தம்மைக் கைவிட மாட்டார் என்ற ஆழ்ந்த உறுதியான விசுவாசத்தின் உச்ச நிலையில் மரியா விளங்கினாள்.**

நெருக்கிடைகள், துயரங்கள், சோதனைகள் வாழ்வில் ஏற்படும்போது நிலைகுலையாது இறைவனின் தஞ்சம் தேடுவதே சிறந்தது என்ற அரிய பாடத்தை மரியாவின் வாழ்விலிருந்து கற்றுக்கொள்ள முடிகின்றது. மரியா இறைவனில் கொண்டிருந்த நம்பிக்கை வீண்போகவில்லை. கடவுள் தம்மை நம்புவோரைக் கைவிடுவதில்லை.

## பிறரின் தேவை அறிந்து உதவி புரியும் மரியா

> மரியாவின் இத்தகைய மனித நேயப்பணி குடும்பங்களிடையே ஒருவர் ஒருவரின் தேவைகளில் தாமாக முன்வந்து சேவை புரிவதற்கு உந்து சக்தியாக இருக்கின்றது.

வானதூதர் கபிரியேல் வழியாகத் தன் உறவினளான எலிசபேத் தன் முதிர்வயதில் ஓர் மகனைக் கருத்தரித்திருக்கின்றாள் என்று அறிந்த மரியா உடனே உதவிசெய்யப் புறப்பட்டாள். எலிசபேத் "அயின்கரீன்" என்ற ஊரில் வாழ்ந்து வந்தாள். நாசரேத்திலிருந்து அயின்கரீன் 115 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இவ்வளவு நீண்ட தூரம் பயணம் செய்து எலிசபேத்துடன் தங்கியிருந்து உதவிகள் புரிந்தாள். "மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபேத்தோடு தங்கியிருந்த பின்பு தன் வீடு திரும்பினார்." **(லூக் 1:56).**

மரியாவின் இத்தகைய மனித நேயப்பணி குடும்பங்களிடையே ஒருவர் ஒருவரின் தேவைகளில் தாமாக முன்வந்து சேவை புரிவதற்கு உந்து சக்தியாக இருக்கின்றது.

## கணவனால் சந்தேகத்துக்குள்ளான மரியா

"மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடிவாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரியவந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார்." (மத் 1:18-19) மரியா மண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த தம் கணவன் யோசேப்பின் சந்தேகத்திற்குள்ளானார். மரியா குற்றமற்றவள் கன்னிமை தவறாதவள், தூய ஆவியால் கருத்தரித்திருந்தாள். யோசேப்போ செய்வது அறியாது கலக்கமுற்றவராய், மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். மரியா - யோசேப்பு இருவரின் மனநிலை குழப்பமான நிலை, மரியா இறைவனில் உறுதி தளரா நம்பிக்கையுடன் இருந்தாள். யோசேப்பின் நேர்மையை இறைவன் ஏற்றார், கலக்கத்தைப் போக்கினார்.

கணவன் மனைவிக்கிடையே சந்தேகங்கள் தோன்றி சீர்குலைந்த குடும்பங்கள் பல உண்டு. வீணாகச் சந்தேகப்படுவதும், பிறர் சந்தேகப்படும் விதமாக நடந்து கொள்வதும் தவிர்க்கப்பட வேண்டியவை, நேர்மையான உள்ளமும் தூய்மையான வாழ்வும் இறை நம்பிக்கையுமுள்ள குடும்பங்களில் சந்தேகத்திற்கு இடமில்லை.

## யோசேப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரியா

ஆண்டவரின் தூதர் அவருக்கு கனவில் தோன்றி "யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூயஆவியால் தான்". யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.. (மத் 1:20 - 21:24).

இங்கு யோசேப்பு மரியாவை ஏற்றுக்கொண்டமை திருமணத்தின் முக்கிய பண்பாகிய கணவன் மனைவி ஒருவர் ஒருவரை உள்ளார்ந்த அன்புடன் ஏற்றுக்கொள்வதை வெளிப்படுத்தி நிற்கின்றது. திருமண வாழ்வின் மிகமுக்கிய பண்புகளில் ஒன்று முறிவுபடாத்தன்மை. மணமக்கள் அன்பினால் முழுமையடைந்து செல்லும் நிலை இல்வாழ்க்கையாகும். இத்திருமண ஒன்றிப்பை எந்தசக்தியாலும்

> இங்கு யோசேப்பு மரியாவை ஏற்றுக்கொண்டமை திருமணத்தின் முக்கிய பண்பாகிய கணவன் மனைவி ஒருவர் ஒருவரை உள்ளார்ந்த அன்புடன் ஏற்றுக்கொள்வதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பிரிக்கமுடியாது. ஏனெனில் திருமணமானது இறைவனால் இணைக்கப்பட்டது. கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் (மத். 19:6) என்ற இறைவாக்கு திருமணத்தில் முறிவுபடாத் தன்மையை உறுதிசெய்கின்றது. இன்பத்திலும் துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் கணவன் மனைவி ஒருவர் ஒருவருக்கு பிரமாணிக்கமாய் இருந்து வாழ் நாளெல்லாம் ஒருவர் ஒருவரை நேசிக்கவும், மதிக்கவும் வாக்களிக்கின்றேன் என்று வாக்கு மூலம் கொடுக்கின்றனர். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அன்பு செய்து அதுவும் உயிரையே கொடுக்கும் அளவுக்கு அன்பு செய்து பிரமாணிக்கம் தவறாமல் வாழ்வதே திருமண அன்பு. இத்தகைய திருமண வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக மரியா - யோசேப்பு தம்பதியரின் வாழ்வு அமைந்திருந்தது.

## அரச கட்டளைக்கு மதிப்பளித்து செயற்படும் யோசேப்பு - மரியா குடும்பம்

> செல்வாக்கு மூலம் சலுகைகள் பெற விளையும் பல மனிதர் மத்தியில் மரியா யோசேப்புக் குடும்பம் அப்படியாகத் தனிச்சலுகை எதையும் தேடவில்லை.

அகுஸ்துசீசர் உரோமைப் பேரரசில் ஆட்சி செலுத்திய காலத்தில் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார். தம்பெயரைப் பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். தாவீதின் வழிமரபினரான யோசேப்பும் மரியாவோடு பெயரைப் பதிவுசெய்ய கலிலேயாவிலுள்ள நசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார்கள். மரியா இயேசுவை கருத்தாங்கியிருந்தாள். இக்காரணமாக தனியான சலுகையைப் பெறவோ அல்லது விதிவிலக்காகப் பெயர் பதிவுசெய்ய வேண்டிய கட்டளையை உதாசீனம் செய்யவோ இல்லை. எல்லோரையும்போல பல சிரமங்கள் மத்தியிலும் பயணத்தை மேற்கொண்டு சென்றனர். செல்வாக்கு மூலம் சலுகைகள் பெற விளையும் பல மனிதர் மத்தியில் மரியா யோசேப்புக் குடும்பம் அப்படியாகத் தனிச்சலுகை எதையும் தேடவில்லை.

## எச்சூழ்நிலையையும் ஏற்றுவாழும் மரியா

யோசேப்பும் மரியாவும் பெத்லகேமில் தங்கியிருந்தபோது மரியாவுக்குப் பேறு காலம் வந்தது. அவர் தம் மகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார் என லூக்கா நற்செய்தியில் கூறுகின்றார். யோசேப்பு தாவீதின் ஊராகிய பெத்லகேமைச் சேர்ந்தவர். அங்கு அவருக்கு வீடு ஒன்று இருந்தது. ஆனால் பெயரைப் பதிவு செய்ய பலர் அங்கு முன்னதாகவே வந்திருந்தமையால் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை மாட்டுத்தொழுவத்தில் தங்க வேண்டியதாயிற்று. யோசேப்பு – மரியா குடும்பம் எந்தச் சூழ்நிலையையும் ஏற்று வாழும் மனநிலை கொண்டவர்கள். வசதியீனங்கள் மத்தியிலும் முறையிடாது மகிழ்வுடன் வாழ்பவர்கள். ஆடம்பரங்களையும் ஆரவாரங்களையும் நாடித்தேடும் மக்களின் போக்கு முற்றிலும் மாறுபட்ட வாழ்வாக மரியா யோசேப்புக் குடும்பத்தின் வாழ்வு விளங்கியது.

## யூத சமய சடங்கு முறைகளைக் கடைப்பிடிக்கும் மரியா

குழந்தை இயேசுவுக்கு எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்தார்கள். தாயின்வயிற்றில் உருவாகுமுன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு "இயேசு" என்று பெயரிட்டார்கள். மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள். யூத முறைப்படி ஒவ்வொரு வருடமும் குழந்தை இயேசுவுடன் பாஸ்காத் திருவிழாவுக்காக எருசலேம் ஆலயத்திற்குச் சென்று வந்தனர். "இயேசுவுக்கு பன்னிரண்டு வயது ஆனபோது வழக்கப்படி விழாவைக் கொண்டாட எருசலேம் சென்றனர்" (லூக் 2:42).

## குடும்பக் கடமைகளில் திருக்குடும்பம்

திருக்குடும்பம் நசரேத்தில் வாழ்ந்து வந்தார்கள். யோசேப்பு தச்சுவேலை செய்து தன் குடும்பத்தைப் பேணிக்காத்தார், பொறுப்புள்ள தந்தையாகவும், குடும்பத் தலைவனாகவும் விளங்கினார். மரியா தன் அன்றாடக் குடும்பக் கடமைகளைச் செய்து வந்தார். இயேசு பெற்றோருக்குப் பணிந்திருந்தார், தந்தைக்கும் தாய்க்கும் வேண்டிய உதவிகள் செய்து வந்தார் எனப் பாரம்பரியம் மூலம் அறிகின்றோம். திருக்குடும்பத்தில் ஒவ்வொருவரும் தம் கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றி

யமை அக்குடும்பத்தின் மகிழ்வான வாழ்வுக்கு காரணமாக இருந்தது என்றால் மிகையாகாது.

## கணவனை இழந்த மரியா

இயேசு பகிரங்கப் பணிவாழ்வில் ஈடுபடுமுன் மரியாவின் கணவரான யோசேப்பு இறந்துவிட்டார் என பாரம்பரிய வரலாறு கூறுகின்றது. வாழ்வில் துணைவரை இழந்தபோதும் மரியா தன் மகன் இயேசுவுடன் வாழ்ந்து தம் கடமைகளை நிறைவேற்றி வந்தார். பொறுப்புகளில் இருந்து ஒதுங்கிவிடவில்லை, அயலவர்களுடன் நட்புடன் உதவிகள் புரிந்து வந்தார். உறவினர் தேவைகளில் முன்னின்று துணைபுரிந்து வந்தார். "கலிலேயாவிலுள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்புப்பெற்றிருந்தனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" என்றார். இயேசு உடனடியாகச் செயற்படாது காலம் தாழ்த்தியபோதும் மரியா செயற்படாது இருக்கவில்லை. இயேசுவின் தாய் பணியாளரிடம் "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" எனப் பதிலளித்தார். திருமண நிகழ்வில் பங்குகொண்டு மணமக்களை வாழ்த்தவும், அவர்களின் திருமணவிழா ஆயத்த வேலைகளிலும் மரியா பங்குகொண்டு உதவிபுரிந்தார்.

## இயேசுவின் பொதுப் பணியில் மரியாவின் பங்களிப்பு

இயேசு தமது முப்பதாவது வயதில் பொதுப் பணியில் பகிரங்கமாக ஈடுபட்டபோது மரியா எல்லா வேளைகளிலும் இயேசுவுடன் செல்லாதபோதும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது இயேசுவின் பகிரங்கப்பணிகளில் உதவி புரிவதைக் காண்கின்றோம். கலிலேயா கப்பர்நாகூம் பகுதிகளில் இயேசு பணிபுரிந்த வேளைகளில் மரியா இயேசுவை சந்திப்பதை அறியமுடிகின்றது. "இயேசுவின் தாயும் சகோதர்களும் அவரிடம் வந்தார்கள்" (லூக் 8:19) எனக் குறிப்பிடுகின்றார் லூக்கா.

## இயேசுவின் மீட்புப் பணியில் பங்குபெறும் மரியா

இயேசுவின் வாழ்வில் கடைசி நாட்களில், பாடுகளின்போது மரியா எருசலேமில் இருந்தார் என நற்செய்திகளின் வழியாக அறிகின்றோம். இயேசு சிலுவை சுமந்து போகும் வழியில் மரியா சந்தித்ததாக அறிகின்றோம். சிலுவையில் இயேசு

அறையப்பட்டிருந்தபோது மரியாவும் அங்கு நின்று கொண்டிருந்தாள் (யோ 19:25) தம் ஒரே மகனோடு கடும் துயருற்றாள். தாயுள்ளத் தோடு தன்னையே அவரது பலியுடன் இணைத்தாள். இறுதியாக இயேசுவின் அன்புச் சீடரின் மூலம் நம் அனைவரையும் ஏற்று நம் தாயானார்.

மரியாவின் வாழ்வு அவளின் பிறப்பு முதல் இறப்புவரை எல்லா மக்களுக்கும் முன் மாதிரியானதாகும். அவள் வாழ்வின் மாதிரிகையை எல்லாக் குடும்பத்தினரும் பின்பற்றி வாழும்போது குடும்பவாழ்வு சிறப்படையும்.

உயிர்த்த இயேசு பலமுறை சீடருக் கும், மரியாவுக்கும் தோன்றினார். உயிர்ப்பின் அனுபவத்தை சீடர்களும் மரியாவும் பெற்றுக் கொண்டார்கள். மரியா தொடக்கத் திருச்சபை யினருடன் தூய ஆவியின் வருகைக்காக, அவரது கொடைகளுக்காக செபத்தில் ஈடுபட்டிருந்தார். அனை வருக்கும் ஆறுதலாகவும், தேற்றரவாகவும் விளங்கினாள். ஈற்றில் இறைவன் மரியாவை இவ்வுலக வாழ்விற்குப்பின் விண்ணகத்துக்கு எடுத்துக் கொண்டார். இவ்வுலகில் மரியா இறைவனுக்கு பிரமாணிக்கமாக வாழ்ந்து அதன் பரிசாக விண்ணகத்தைப் பெற்றாள்.

மரியாவின் வாழ்வு அவளின் பிறப்பு முதல் இறப்புவரை எல்லா மக்களுக்கும் முன்மாதிரியானதாகும். அவள் வாழ்வின் மாதிரிகையை எல்லாக் குடும்பத்தினரும் பின்பற்றி வாழும்போது குடும்ப வாழ்வு சிறப்படையும்.

**துணைநின்ற நூல்கள்:**

1) திருவிவிலியம்
2) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

# இவ்விதழின் இறையியலாளர் 24

அருட்சகோ. ஆ. ஜஸ்ரின்

## ஜெருசலேம் நகர் புனித சிறில்

**ஆயர், மறைவல்லுனர் (கி.பி. 315 – 386)**

புனித சிறில் கி.பி. 315ம் ஆண்டு ஜெருசலேமில் பிறந்தார். இவர் இளமையில் சிறந்த கல்வியறிவைப் பெற்றுக் கொண்டார். புனித சிறில் 345ம் ஆண்டில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 348ம் ஆண்டு தலைசிறந்த நூலான "திருமறைச் சுருக்கத்தை" எழுதினார். புனித மக்சிமிஸ்லைத் தொடர்ந்து கி.பி. 350ம் ஆண்டில் ஆயராக நியமனம் பெற்றார். இவர் தனது போதனைகளின் பொருட்டு மூன்றுமுறை நாடு கடத்தப்பட்டார். இறுதியான நாடுகடத்தல் ஏறக்குறைய 11 வருடங்கள் நீடித்தன. ஜெருசலேம் நகரில் ஆயராக இருந்த காலத்தில் ஆரியப் பதிதத்தை பூண்டோடு ஒழித்துக் கட்ட புனித அத்தனாசியாருடன் இணைந்து செயற்பட்டார். இவர் 386 கி.பி. மூன்றாம் மாதம் பதினெட்டாம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

சிறில் அறிவின் உச்சக்கட்டத்தை அடைந்த சிறந்த அறிவாளியோ. எழுத்தாளரோ அல்ல. மாறாக இவர் ஒரு சிறந்த மறையாசிரியர், மறையுரையாளர்.

### மறையுரை:

இவருடைய மறையுரை தெளிவானதாகவும், கருத்தைத் திறம்பட குறித்துச் சொல்வதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் இருந்தது. கேட்போர் இவரது மறையுரைகளை மிகவும் ஆழ்ந்த முறையில் மனத்தில் ஏற்றுப் பயன்பெற்றனர். இவர் இதயத்தில் உண்மையைத் திறம்பட வெளிப்படுத்தும் மறையுரையாளர்.

### நூல்களும், விளக்கவுரைகளும்

"திருமறை விளக்கம்" என்ற இவருடைய முக்கிய புத்தகத்தில் இவருடைய முக்கியமான பணிகள் விபரிக்கப்பட்டுள்ளன. இதில் புதிதாக கிறிஸ்தவ நெறியைத்

தழுவியவர்களுக்கு உபதேசங்களைக் கொடுத்தார். இவர் சிறப்பாக விசுவாச அறிக்கையைக் குறித்து பல விடயங்களைக் கூறினார். இவற்றில் விசுவாச அறிக்கை கிறிஸ்தவப் போதனையை இரத்தினச் சுருக்கமாகத் தன்னகத்தே கொண்டுள்ளது என்றும் வேதாகமத்தில் இருக்கின்ற போதனைகளின் அடிப்படை இதுவே என்றார். திருத்தூதர்கள் எருசலேமை விட்டு வெளியே நற்செய்திப் போதனையை மேற்கொள்ள இவ்விசுவாச அறிக்கையையே அடிப்படையாகக் கொண்டிருந்தனர் என்கின்றார். மேலும் இந்த விசுவாச அறிக்கைக்கு எதிராக வானதூதரோ அல்லது நானோ மீண்டும் வந்து போதித்தாலும் நம்ப வேண்டாம் என்றார். தொடக்கவுரையின் மூலம் புதிதாக திருமுழுக்குக்காக தயாரிக்கப்படுவோர் எவ்வாறான கிறிஸ்தவக் கடமையினைச் செய்ய வேண்டும் எனக் கற்பித்தார்.

## திருவருட் சாதனங்கள்

திருமுழுக்கு, உறுதிப்படுத்தல் மற்றும் தேவநற்கருணை ஆகிய புகுமுக அருட்சாதனங்கள் தொடர்பான கருத்துக்களை எடுத்துரைத்தார். ஏனைய இவரின் எஞ்சிய போதனைகளின் வாயிலாக உயிர்த்த விழாவுக்குப் பிறகு புதிதாகத் திருமுழுக்குப் பெறுபவர்களை உறுதிப்படுத்தும் முறையில் பல கருத்துக்களை எடுத்துரைத்தார். எமது ஆன்மீக விழாவிற்கும் ஊற்றும், மையமுமாக விளங்கும் திவ்விய நற்கருணை குறித்து தனது சிறப்பான போதனையை மேற்கொண்டார். நற்கருணை உட்கொள்ளும்போது ஒரு கடுகளவுத் துண்டுகூட கீழே விழவிடக்கூடாது. அவ்வாறு விழுந்தால் உன் உடலில் ஒரு பகுதியை இழந்ததாகக் கொள் என்கின்றார்.

## புதுமைகள் செய்பவர்:

போதனை மட்டும் அல்ல குணப்படுத்தலையும் புனித சிறில் மேற்கொண்டார். பிசியனா என்கின்ற இடத்திலே முடக்குவாதமுற்ற ஒருவனைக் குணப்படுத்தினார்.

இவர் எருசலேமின் ஆயராக நியமனம் பெற்று அடுத்த ஆண்டில் மிகவும் ஒளிமயமான சிலுவை விண்ணில் இருந்து கல்வாரி மலைமேல் இறங்கியதை இவர் மக்கள் கூட்டத்துடன் இணைந்து கண்ணால் கண்டதாகக் கூறப்படுகிறது.

## உசாத்துணை :

புனிதர்களின் பாதையில், ஆர். எஸ். அமல்ராஜ் சே.ச. வைகறைப் பதிப்பகம். திண்டுக்கல் 2001.

*Hand Book of Patrolology, J. Tixeront, D.D., B. Herder Book Co., London, 192 F.*

# SYNOPSIS

## Our pope speaks......

# The True Meaning of Christmas

In Advent, the liturgy often repeats and assures us, as though seeking to defeat our mistrust, that God "is coming": He comes to with us, in each one of our situations; he comes to live among us, to live with and in us; he comes to fill the distances that divide and separate us; he comes to reconcile us with himself and with one another. He comes in the history of humanity to knock on the door of every man and woman of good will to offer individuals, families and peoples the gift of fraternity, concord and peace.

Therefore, Advent is par excellence the time of hope, in which believers in Christ are invited to remain in vigilant and active expectation, nourished by prayer and by a concrete commitment of love. May Christ's approaching nativity fill the hearts of all Christians with joy, serenity and peace!

To live this Advent period more authentically and fruitfully, the liturgy exhorts us to look at Mary most holy and to undertake spiritually with her the path to the cave of Bethlehem. When God knocked on the door of her youth, she received him with faith and love. In a few days, we will contemplate her in the luminous mystery of her Immaculate Conception. Let us be attracted by her beauty, reflection of divine glory, so that "the God that is coming" will find in each one of us a good and open heart, which he can fill with his gifts.

*- Pope Benedict XVI -*

# Joseph - Spouse of Mary

St. Joseph was the husband of Blessed Virgin Mary and father of Jesus Christ by right of marriage and by legal ties. The name that he bore in honor of the Patriarch Joseph, son of Jacob, was quite common in his time.

The genealogies that we find in the gospels of Mathew and Luke, though they have some discrepancies, show that Jesus, by being the legal son of Joseph, had a right to be called "Son of David," a recognized title of the Messiah.

It is commonly taken for granted, basing on the gospel accounts, that Joseph and Jesus were carpenters. But the Greek word, *tekthon,* like the corresponding Latin word, *faber*, signifies in itself no more than "craftsman, artisan," and could be used of a worker in stone or metal as well as in wood.

Art and popular imagination have usually pictured Joseph as an old man. But this is surely a false idea derived from the stories found in the apocryphal books. Since the Gospels never suggest that he was still living during the public ministry of Jesus, he most likely died before he was 50 years old.

Historically, Joseph's conduct, when he learned of Mary's pregnancy, has had three principal interpretations: (1) that he actually suspected Mary of adultery ; (2) that he surmised she was the mother of the Messiah, and he wished to withdraw in humility; (3) that he was subject to agonizing perplexity. Traditionally, the third supposition has by far prevailed.

The first known independent commemoration of St. Joseph occurs in the 8th century martyrology in Northern France and Belgium. The Benedictine monastery at Reichenau lists March 19th as the day of St. Joseph's death. After the Saint's steady rise in popular esteem and in the

liturgy, a momentous event in the history of the devotion occurred in Pope Pius IX's proclamation of St. Joseph as Patron of the universal Church on the 8th of December 1870.

*Rev. Fr. P. J. Jebaratnam*

# The Messianic Hope According to the Scripture

The origin of messianic tradition started from the fall of kingship in Juda especially during the exile (587 – 537 B.C.E.) Many scholars believe that the notion of Messiah is intrinsically a socio – political notion which must be assessd primarily in the historical setting and within the context of the Biblical idea of kingship. Further this Messianic hope was developed spontaneously as a solution to a series of problems for which there was no direct solution given in the Pentateuch.

The concept of Messiah in the history of Israel is complex. It varied according to time, place and social settings. For example, it is not clear whether the Hebrew Bible intended to mean Messiah a future redeemer as we understand now.

The prophets consider Messiah as political redeemer, a noble king who fears the Lord and the one who leads his people to ethical and moral renewal etc. The psalms also speak of the divine deliverance. Some texts of the psalms speak of the hope for the Messiah from the Davidic family and the Messiah is considered as ideal Davidic king.

The Jews denied the Messiaship of Jesus while the early Christians had the Messianic hope of the period. The Messiaship of Jesus is entirely different from the traditional thinking of the Jews. The evangelist John gives Jesus the title of messiah (Jh.1:41, 4:25) The Jewish historian Josephus also refers to Jesus as Messiah but he is not consistent in this usage of term.

*Bro. A. Eugene Amalaraj OMI*

# Mary and Pious Practices Marian Devotion Aim

Devotion is a God experience. There are several Marian devotional practices, carried out by the people, pilgrimage to shrines, prayers, rosary and sacramentals which are connected to Mary.

Mother Mary was the co-redemptive of the world with Jesus her son. She joined herself to the plan of redemptive works. She was pointed out in the gospel as Full of Grace (LK.1:28), Blessed (LK.1:45) and Co-redeemer (Gal.4:4). Therefore the church organized several feasts to celebrate in honor of mother Mary. The Marian devotion was started since 5th century A.D. Mother Mary did not abandon her children and the Holy Fathers but encouraged her devotion through their theological reflections and apostolic exhortations.

Our ancient Church called Mary as the mother of God and asked her help and intercession in the midst of their sufferings and struggles. After the council of Ephesus the Marian devotion spread all over the world and people venerate her with high and special devotion than the other saints of the Church. Through the rosary we meditate the mysteries of Jesus and gain the knowledge of Gospel. Mary herself insisted on us to pray the rosary through her apparitions. She says that she will give special protection and grace to those who pray the rosary.

Many saints had special devotion towards Mary and showed the way to have Marian devotion. St. Augustine says that Mary was a mother of reconciliation. St. Basil says "sinners do not be afraid go to Mary when you are in sufferings and need". These quotations show the unshakable faith and devotion of, Mary. Therefore we the children of the Church have to listen to the tradition and truth of the Church and grow in Marian devotion.

*Rev. Sr. Lumina H.F.B*

# Mary the mother of Christ in the Apostolic Exhortations of Popes

Mary the woman of Nazereth who according to the Gospel and the early Christian tradition as firmily believed, gave birth to Jesus; God's entry into the world was made with the divine visitation addressed to Mary and the free response of the handmaid of the Lord, Thus she becomes, irrevocably and with her whole being invited in God's work. Throughout the passage of Church's history there have been many Apostolic Exhortations of Popes regarding mother Mary's Divine Motherhood, her perpetual Virginity, Immaculate Conception and the Assumption.

The Popes present Mary in biblical, patristic, ecclesial and ecumenical perspectives; They all stress upon the uniqueness of Mary's grace which was greater than that of any other human being. God filled Mary marvelously with an abundance of heavenly gifts of grace from his divine treasure, far- exceeding all angelic spirits and saints, so that she excelled with such a fullness of sanctity, that it has no equal below God.

Popes firmly teach their sheep that through the 'fiat' Mary begins to participate in the saving work of her son, so will the whole Church through her faith share is his work and mission.

*Rev. Bro. A. Christy Ruban Fernando*

# Symbolical Search: Mariology and Woman Liberation

In all religions a kind of deification of the mother figure or feminine aspect is something specific. When a large number of missionaries came from the Iberian peninsula to the Tamil speaking areas veneration of Mary was effectively introduced. This was not strange to the Tamil culture with the deification of 'Kannagi'.

In modernistic and post-modernistic trends male superiority seems to have an edge and whatever feminine seems to be dependent on the male domination. This tendency is gradually loosened.

According to the changing signs of the times as depicted by the American Bishop's Conference Mary is given a model of a liberated woman. 2nd Vatican council and 'Marialis Cultus' of 1974 reflect this view. Through not much is spoken of Mary in the Scriptures what is found there is more than enough to show that she was a perfect disciple(of Our Lord).

Down through the history we find Mary presented as a model Virgin, Mother of God, New Eve, as my lady (Our Lady), Birth of heaven, Immaculate Conception etc.

Besides that at present in keeping with the theological background of Latin America Mary is given as a poor (working class) Lady.

Pope John Paul II of blessed memory looks as Mary as the Mother in the Holy Family of Nazareth in the present context of abortion, broken families, woman being considered as sexual object, ill-effects of AIDS on woman and children etc.

In the background of woman's liberation whatever symbols, art, statues, rituals, songs, litanies etc. connected with Mary have to be re read or reviewed.

*Rev. Fr. S.F. Kirupananthan*

# 'Jesus' Birth: Holy innocents Yesterday and Today

Above all others, Christ-birth, is giving life to history and leading into newness. The innocent children were the first martyrs for Christ. Many scholars see the Mathean account of magies as a fiction. Jews were expecting the Messiah for whom the magies were searching, Herod, the power-seeker was disturbed by the birth of the Messiah.

According to St. Matthew this massacre is seen as the fulfillment of the Old Testament passage: Jer.31:14. By the signs, presents and statements of Herod, we see the greatness of the Messiah. According to Eronimus and Augustine the whole innocent children are being remembered for such a long time, as they witnessed to Christ without knowing him, by their death.

At present many children are being killed because of the modern scientific, technical "development" and by the natural disasters, like the Tsunami. They also are indeed Holy Innocents. Every child is born with right of life and dignity. They are to be nurtured as they are the gifts of God and they live for God.

*Rev. Sr. Arul H.F.B*

# Mary in the Life of Family

Family is an institution of sharing love and relation and also the past of society. It is the house of formation in constructing the new world. The whole growth of the world depends on the very growth of a single family. So the family as such is prior and important to the well-being of our world.

Mary, the mother of God, was born and lived in a family, and it is said that she was brought up with the guidance of parents in faith and relationship with God. And there after she brought Jesus up very well, as she herself was by her parents.

Though she was to face many trials in this world, she offered everything to God.

Thus, the Holy family in Nazareth became well-known and exemplary among the all families in the world. Since she was very committed and faithful to her call, she was always beside Jesus in his earthly mission of redemption. The life of Mary from her birth to death is exemplary to all of us. So let us we follow her model life.

*Mr. S. Pancras*

# St. Cyril of Jerusalem

***Bishop Doctor (A.D. 315- 386)***

St. Cyril was born in 315A.D. at Jerusalem and he received a profound education. He was ordained priest in 345A.D. In 348 he gave his first work "Catechetical instructions" to the candidates for Baptism and the seophytes. He become bishop after S. Maximus in 350AD.

For a long line Cyril displayed an attitude of reserve towards the contemporary dogmatic Controversies. In his book "Catecheses", he opposed Arianixm. He worked together with At. Athanasius against the controversies. He was three timex expelled from his See. His last cxile was for about eleven years. In died in March 18, 386 A.D.

St. Cyril was neither a man of Superior intellect nor an Original writer but he was a cafechist and a famous preacher.

There are series of instructions addressed to the catechumens and the newly baptized in order to explain to them the creed and the sacraments, especially baptism, confirmation and the Eucharist. Besides these he was a wonder worker.

*Rev. Bro. A. Justin*

+

அருளாளர் அன்னை திரேசா சமூக சேவைக்குழு
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

## இம் மண்ணின் ஏழை மாணவருக்கு கை கொடுக்க விரும்புவோர்க்கு,

அன்பானவர்களே, எமது குருத்துவக்கல்லூரியில் இயங்கிவரும் அருளாளர் அன்னை திரேசா சமூக சேவைக்குழு ஏழைமாணவர்களுக்கு, பொருளாதார, கல்வி ரீதியில் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. இந்த ஏழைகளின் பணியில் தங்களையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறோம்.

“இறைபணியில் பங்கேற்கும் உங்களை இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக”.

**நன்றி**

***கணக்கு இலக்கம்: 16-00-02-1411201-9***
***வங்கி இலக்கம்: 22376***
***வங்கி: ஹற்றன் நஷனல் வங்கி.***
***திவி சக்தி வைப்புக் கணக்கு.***

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை**
**யாழ்ப்பாணம்**
**இலங்கை.**

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 24

## முடிவுகள்

**சரியான விடைகள்:**

**இடமிருந்து வலம்**

01 குதிக்காலை

25 பாவம்

28 அருமை

31 அம்மா

**மேலிருந்து கீழ்**

01 குழந்தை

02 திரித்துவம்

04 கானாவூர்

06 அரசுரிமை

09 மாம்பழம்

11 குருபக்தி

## பரிசு பெறுவோர்

*1ம் பரிசு :*

***இரா. ரமணன்***

சென். பற்றிக்ஸ் கல்லூரி,

யாழ்ப்பாணம்.

*2ம் பரிசு :*

***பத்திநாதன் ஜேன் புளோரிடா***

உரும்பிராய் கிழக்கு,

உரும்பிராய்.

*3ம் பரிசு :*

***பரராஜசிங்கம் சிறிசங்கர்***

ஞானப்பிரகாசர் வீதி,

மல்வம்,

உடுவில்.

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

***து. நிவேதா, க. அருள்மதி,*** உடுவில்;

***ஞா. மேரி ஆன் சோனியா,*** இளவாலை;

***ஜே. யசோதினி,*** யாழ்ப்பாணம்;

***ஜெயா செபமாலை,*** வவுனியா;

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 25

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

அனுப்புபவரின் பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

..............................

### இடமிருந்து வலம்:

1. இயேசுவுக்காக பலியான <u>இவர்கள்</u> மாசில்லாதவர்கள் (6)

8. மார்கழி மாதம் 25ம் நாள் (5)

21. பூட்டு (2)

25. மூதாதையர் பட்டியல் (5)

31. சமய சீர்திருத்தவாதிகளில் ஒருவர்
 – வலமிருந்து இடமாயுள்ளார். (4)

மேலிருந்து கீழ் :

01. இவர் யாக்கோபின் மைந்தனான யோசேப்பு (6)
02. திசைகளில் ஒன்று குழம்பியுள்ளது. (4)
05. உணவு தரும் தொழில் (6)
12. தி. ப. 4:36ல் வரும் இவர் தலைகீழாகவுள்ளார். (5)
15. பசாசு குழம்பியுள்ளான் (4)
22. தலைகீழான காற்று (2)

- விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.
- விடைகளில் பல இவ்விதழின் கட்டுரைகளில் உள்ளன.
- விடைகளை அனுப்ப மேலுள்ள கூப்பனை மட்டுமே பாவிக்கவும்.
- விடை வந்து சேரவேண்டிய இறுதி நாள். 05-03-2007

## முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 21**

**இறையியல் கோலங்கள்,**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**



## எம் இனிய இறையியல் கோல வாசகர்களே

எமது நாட்டில் பண வீக்கமும் பொருட் செலவும் அதிகரித்துள்ள இவ்வேளையில் நாமும் எமது வெளியீட்டிற்கான சந்தாவை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி யுள்ளோம். நீங்கள் அறிந்தது போன்று இன்று காகிதாதிகள் விலையும் அச்சிடல் செலவும் அதிகரித்துள்ளது. எனவே நாங்கள் உள்நாட்டிற்கான ஆண்டுச் சதாவாக 160 ரூபாவையும் வெளிநாட்டிற்கான ஆண்டுச் சந்தாவாக 15 US $ ஐயும் பெற விரும்பு கின்றோம். எனவே மனமுவந்து இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த ஆண்டிற்கான கட்டணம் செலுத்தாதவர்களும் தயவுசெய்து உங்கள் பதிவெண்ணுடன் கட்டணத்தை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எமது இறையியல் கோல வளர்ச்சிக்கு எதிர்பார்த்து நிற்கிறோம்.

நன்றி — நிர்வாகக் குழு

## அன்பான வாசக நேயர்களே!

**இனிய வாசகர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**



*Merry X'mas and Happy New Year*

# அன்பான வாசகர் நெஞ்சங்களே.

உங்கள் கரங்களில் இறையியல் கோல சஞ்சிகை இலகுவில் கிடைப் பதற்காக நாம் சில இடங்களுக்கு முகவர்களை நியமித்துள்ளோம். இந்தப் பணியை ஆற்ற முன்வந்துள்ள இவர்களை அன்புடன் வரவேற்பதோடு இவர்கள் பணிசிறக்க உங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கும்படி அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

நன்றி

- நிர்வாகக் குழு -

## முகவர்கள்

1. பாண்டியன்தாழ்வு பங்கு - திரு. மரியநாயகம்
2. நாவாந்துறை பங்கு - செல்வி ம. செல்நாயகி
   செல்வி ரூபா
3. இளவாலை மாரீசன்கூடல் பங்குகள் - செல்வன் பே. றொனிபஸ்
4. சக்கோட்டைப் பங்கு - செல்வி ஏ. நேசநாயகி [சுசி]
   செல்வி ஏ. லுமின் கொன்சேகா
5. சுண்டிக்குளி பங்கு - செல்வி றொபிற்றா சாந்தினி செல்வநாயகம்
   செல்வி லூட்ரொய்சியா லூர்த்துநாயகம்
6. மானிப்பாய் பங்கு - செல்வி அ. ஜெயசுதா
   செல்வன் ஶ்ரீசங்கர்
7. ஆனைக்கோட்டைப் பங்கு - R. புஸ்பநாயகி
   P. கவிதா
8. பாசையூர் பங்கு - செல்வி றொ.தனுசியா
9. உரும்பிராய் பங்கு - செல்வி டல்சி
   செல்வி இந்துசா

Printed By: A.C.M. Press, Jaffna. Tel. No. 222 9102

க - 51
ஔ - 55

ஜ - 64
ஏ - 73
உ - 24
ரு - 56
௪ - 31
ஏ - 83

ஈ - 56
ஐ - 45
~~- 86~~

45
60
77
78
37
541
74
72
51
47

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 100/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 10
Euro 8

தனிப்பிரதி 30/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 100/=
Foreign (Incl. postage) U.S.$ 10
Euro 8
Single Copy Rs. 30/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145

Registered
No. QD 76